விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 17 செவ்வாய்க்கிழமை (03.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை?

## பிரித்தானியா கொண்டுவரத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவர பிரித்தானியா முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அரசு போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பாகப் போதுமான விசாரணைகளை நடத்தவில்லை எனத் தெரிவித்து பிரித்தானியா பொருளாதாரத் தடை விதிக்கும் திட்டம் இருப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோ.சைக்கிள் தீக்கிரை

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இனந்தெரியாத நபர்கள் தீக்கிரையாக்கியதில் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைககிளொன்று எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. க.கபில்குமார் (வயது-25) என்பவரது மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

வீட்டின் முன்பகுதியில் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிளை எரித்தவர்கள் குறித்து எதுவும் தெரியாது எனவும் கூறப்பட்டது. இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-19, 24)

## கூட்டமைப்பினருக்கு தென்னாபிரிக்கா அழைப்பு!

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பது தொடர்பாக பேச்சு நடத்த வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தென்னாபிரிக்கா அழைப்பு வடுத்துள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு உதவத் தயாராக இருப்பதாக, அண்மையில் கொழும்பு வந்தி 20-ம் பக்கம் பார்க்க

## கோவணத்துடன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நிவாரணம் இல்லாத வரவு - செலவு திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மாலை 4 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று அகில இலங்கை கமநல சம்மேளனத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுதிட்டத்திற்கு முன் நிதி அமைச்சு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாமை மற்றும் வரவு - செலவு 20-ம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு எதிராக பயன்படும் விடுதலைப்புலிகளின் பணம்!

அமைச்சர் பீரீஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சொந்த நாடுகளில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் காரணமாக தமது இருப்பை கருதி சர்வதேச நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை கொடுத்து வருவதாகவும் இதற்கு பதிலாக இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக அந்த நாடுகளின் மதிப்பீடு நியாயமாக இருக்க வேணடும் எனவும் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் மற்றும் அதன் ஆதரவாளர்களிடம் இருந்து பெறும் பணத்தை சில நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தமது தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதும் விடுதலைப் புலிகளால் சேகரிக்கப்பட்ட நிதி இலங்கையின பெயரை கெடுக்க தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் வெளிநாடுகளில் இருந்து வரும் அழுத்தங் 20-ம் பக்கம் பார்க்க

## வடக்கிற்கு இந்.பிரதமர் சென்றால் அதனை ஐ.தே.கட்சி எதிர்க்கும்

### ஜோன் அமரதுங்க எச்சரிக்கை



(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் அழைப்பை ஏற்று இந்திய பிரதமர் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்வாரானால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கும் என அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிநத ராஜ 20-ம் பக்கம் பார்க்க

## ஐ.நாவின் விசேட பிரதிநிதி இன்று யாழ்ப்பாணம் வருகை

### முதலமைச்சரையும் சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா. விசேட பிரதிநிதி இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

இங்குவரும் அவர் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதோடு வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள கோணப்புலம் நலன்புரி நிலையத்துக்கும் செல்லவுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகளை இலங்கைக்குள் அனுமதிப்பதற்கு அரசாங்கம் இணாங்கியுள்ளது. இதனையடுத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி நேற்றுத் திங்கட்கிழமை இலங் கைக்கு வந்திருந்தார் 20-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் செயலில் திருப்தியில்லை வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சொல்லில் ஒரு முகத்தையும் செயலில் இன்னொரு முகத்தையும் காட்டிவருவதாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட தான் தயார் என்றும் கேட்டதெல்லாம் கொடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி கூறிவருகின்ற நிலையில் இங்கு நடப்பது வேறாகவே உள்ளதாகவும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் யாழிலுள்ள வாசஸ்தலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஒத்துழைப்பதாகத்தான் கூறிவருகிறார்.

ஆகவே அவ்வாறான ஒத்துழைப்புகளை எமக்கு வழங்குவதில் ஜனாதிபதியுடன் எமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனால் நடைமுறையில் நாங்கள் பார்ப்பது அதற்கு முரணாகத்தான் இருக்கின்றது.

இதில் ஜனாதிபதியினை குறை கூறுவதா? அல்லது அவரின் கீழ் இருக்கின்ற அலுவலர்களை குறை கூறுவதா? என்று எமக்குத் தெரியவில்லை.

இதற்கு உதாரணமாக இங்கு நடைபெற்ற 20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் உணர்வுகளினை அடக்காதே! என்ற கோசத்துடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் பல்கல்லைக்கழகம் கடந்த மாதம் 17ஆம் திகதியிலிருந்து டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி



வரை மூடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தே மேற்படி ஆர்ப்பாட்டம் மாணவர்களினால் நடத்தப்பட்டது.

மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பல்கலைக்கழகத்தின் புறச்சூழலில் பெருமளவிலான கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டதனால் அங்கு நேற்று பெரும் பதற்றமும் அச்ச நிலையும் நீடித்திருந்தது.

கடந்த மாதம் நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டிற்காக யாழ். பல்கலைக்கழகம் உட்பட நாட்டின் அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் கடந்த மாதம் 9ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மட்டும் டிசெம்பர் 2ஆம் திகதிவரை மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் பல்கலைக் கழகம் மீள ஆரம்பித்துள்ள நிலை யில் மாணவர்கள் விரிவுரைகளினை புறக் கணித்ததோடு மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள்; மாணவர் ஒன்றியத்தின் கோரிக்கைகள் என்னவாயிற்று? விடுமுறை விட்டது எதற்காக? ஏனைய பல்கலைக் கழகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வேறுபடுவது ஏன்? உணர்வுகளினை அடக்க முயற்சிக்காதே, இது பல்கலைக் கழகமா? உயர் பாதுகாப்பு வலயமா? என எழுதப்பட்ட பதாகைகளினை எந்தியிருந்ததோடு கோசங்களினையும் எழுப்பியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் ஈடுபட்டிருந்தமையினால் பல்கலைக் கழகத்திற்கு வெளியே இராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததோடு கலகமடக்கும் பொலிஸாரும் கள மிறக்கப்பட்டிருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டம் பல்கலை வளாகத்தினுள் இடம் பெற்ற பேரணியுடன் நிறைவுக்கு வந்தது. (எ-4)


மனத் தளர்வா?
தனிமையா?
தற்கொலை எண்ணமா?

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள்.
இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

(C-5586)

கைகொடுக்கும் நண்பர்கள்
021 222 8117

பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்
• பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே • மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (சி-5637)


# பரீட்சைக்கான அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம் !! கல்விப் பிரதேசத்தில் பரீட்சைப் பணியில் ஈடுபடும் இணைப்பு நிலைய மேற்பார்வையாளர்கள், இணைப்பு நிலைய உதவி மேற்பார்வையாளர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், பரீட்சை நிலைய உதவி மேற்பார் வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை 04ம் திகதி காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பரீட்சைத் திணைக்கள அலுவலர்களால் நடத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்குபற்றுபவர்கள் மட்டுமே பரீட்சைப் பணியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதனால் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா அறிவித்துள்ளார். (எ)

# செங்கல்பட்டு முகாமில்; 7 அகதிகள் கைது

(சென்னை)

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க தயாராக இருந்த நிலையில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட 7 இலங்கை தமிழ் அகதிகள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை அருகில் உள்ள செங்கல்பட்டு விசேட தடுப்பு முகாமில் இவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் சென்னை நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இவர்களை கைது செய்ய முயற்சித்த போது பொலிஸார் மீது முகாமில் இருந்த மேலும் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே 7 பேர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, செங்கல்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 33 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறி விழுந்த குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் கரவெட்டி நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜெயகுமாரி (வயது 40) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை 7.30மணியளவில் மீட்கப்பட்ட சடலம்பிரேதபரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் மதியம் 2 மணியளவில் அவரது தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-60)


சிறுவர் சித்திரப் போட்டி

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும்
வட மாகாண சிறுவர்களது உளவள ஆற்றலை மேம்படுத்தும் சிறுவர் சித்திரப் போட்டி

போட்டியின் எண்ணக்கருக்கள்:
- சிறுவர்களது முன்னேற்றப்பாதைகள்
- சமகால சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

6-12 வயது கீழ்ப் பிரிவு 13-17 வயது மேல் பிரிவு

- ஒருவர் ஒரு ஆக்கம் மட்டுமே அனுப்புதல் வேண்டும்.
- ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது கிராமசேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்ப வேண்டும்.
- படம் வரைந்த மறு பக்கத்தில் சித்திரத்தின் தலைப்பு, வரைந்தவரது பெயர், தரம், பாடசாலை, பிறந்த திகதி, வசிக்கும் இடம் என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- வரைவதற்கு A3 தாள் மட்டுமே உபயோகிக்கப்படுதல் வேண்டும்.
- சித்திரங்கள் டிசம்பர் 15ஆம் திகதிக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (நேரிலும் தரலாம்.)

இரு பிரிவுகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு...

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | : ரூ. 10,000.00 | 3 ஆம் பரிசு | : ரூ. 3,000.00 |
| 2 ஆம் பரிசு | : ரூ. 5,000.00 | 10 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும் | |

(4640)


பெற்றுக்கொள்ளப்படும் அனைத்துச் சித்திரங்களும் பொது மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டு நடுவர்களால் தெரிவு செய்யப்படும்.

ஆக்கங்கள் வரைந்து அனுப்ப வேண்டிய முகவரி :
சிறுவர் சித்திரப் போட்டி, சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,
இல. 60A, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.





வாடகைக்கு விடப்படும்

6 கடை கொண்ட தொகுதி பிளாட் செய்யப்பட்டது.











சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி சந்தையடியில் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு :
024 7911087, 0771390659

(C-5638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மெய்ப்பொருள் காண்பதறிவு

தந்தியை விட வேகமாக போகக் கூடியது எது? என்று கேட்டார் ஒருத்தர்.

"வதந்தி" என்றார் இன்னொருவர்.

அவர் கூறியதில் தவறில்லை.

வதந்தி வேகமாக பரவுவதற்கு என்ன காரணம்? ஒன்றுக்கு இரண்டாக மிகைப்படுத்திச் சொல்லும் மனித சுபாவம் ஒரு காரணம். சொல்வதை அப்படியே நம்புவது இன்னொரு காரணம்.

"எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர்.

யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடுவதா? அறிவு வேலை செய்ய வேண்டும். அதில் எந்தளவுக்கு உண்மையிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்.

முக்கிய பொறுப்பிலுள்ளவர்களுக்கு இது மிக முக்கியமான ஒரு தகுதி.

ஒரு நாட்டில் சாதாரண ஆள் ஒருத்தன் இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அதை மிகவும் பிரியமாக வளர்த்தான். அவனுக்கு அது மிக நெருக்கமான நண்பன். வேறு மனிதர்கள் யாரும் கிடைக்கவில்லை போலிருக்கிறது. அந்தக் கழுதைக்குக் 'கந்தர்வசேனன்' என்று பெயர் வைத்தான். அந்தப் பெயரைச் சொல்லித்தான் அதை அவன் கூப்பிடுவான். அவ்வளவு பிரியமாக வளர்த்த அந்தக்கழுதை ஒருநாள் திடீரென்று இறந்து விட்டது. இவன் மிகவும் கவலைப்பட்டான். சாப்பிடக்கூட பிடிக்கவில்லை. முகத்தை 'உம்' என்று வைத்துக் கொண்டு மிகவும் கவலையுடன் இருந்தான்.

இந்த நேரம் பார்த்து அவனுக்கு வேண்டப்பட்ட ஒருத்தன் அந்தப் பக்கமாக வந்தான். அவனைப் பார்த்தான்.

"என்னப்பா இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டான். கந்தர்வசேனன் இறந்து விட்டதாகச் சொல்லி குலுங்கிக் குலுங்கி அழுதான் அந்த ஆள்.

"கந்தர்வசேனன் யார்?" என்று கேட்டான் இவன். இவன் இப்படிக் கேட்டவுடன் அவன் சத்தம் போட்டு அழ ஆரம்பித்தான். அவன் அழும் வேகத்தைப் பார்த்ததும், "சரி, கந்தர்வசேனன் என்பது முக்கியமான ஒரு பெரிய மனுஷன் போலிருக்கிறது" என்று முடிவு செய்து கொண்டான்.

நம்முடைய நண்பனின் துக்கத்தை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தான். உடனே தலையை மொட்டையடித்துக் கொண்டான். மீசையை எடுத்து விட்டான். கறுப்பு உடையை அணிந்து கொண்டான்.

கந்தர்வசேனன் இறந்த செய்தி காற்றுவாக்கில் பரவ ஆரம்பித்தது. ஊரிலுள்ளவர்களெல்லாம் இந்த செய்தியைக் கேட்டதும் அவர்களும் தலையை மொட்டையடித்துக் கொண்டு கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டார்கள்.

ஒருநாளில் நகரம் முழுவதும் துக்கத்தில் சூழ்ந்து விட்டது. எங்கே பார்த்தாலும் மொட்டைத்தலை, கறுப்புத்துணி.

அந்த நாட்டு அமைச்சர் இதைப் பார்த்தார். சனங்களெல்லாம் கவலையாக இருக்கிறார்களே என்று நினைத்து சிலரைக் கூப்பிட்டு விசாரித்தார்.

"கந்தர்வசேனன் இறந்து விட்டார். அதுதான் துக்கம் அனுஷ்டிக்கிறோம்" என்றார்கள். அவராவது கொஞ்சம் யோசிக்க வேண்டுமல்லவா. ஒன்றும் விசாரிக்கவில்லை.

"மக்களின் துயரத்தில் நாமும் பங்கெடுக்க வேண்டும்" என்று நினைத்து அவரும் மொட்டையடித்துக் கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார். அமைச்சர் இப்படி இருக்கிறார் என்ற செய்தி அரசருக்கு எட்டியது. அவரும் மொட்டை போட்டுக் கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்.

அன்றிரவு ராஜா மொட்டைத்தலையுடன் மிகவும் சோகமாக அந்தப்புரத்துக்கு வந்தார். "என்னங்க இது? என்ன விடயம்? உங்களுடைய துக்கத்துக்கு என்ன காரணம்?" என்று ராணி கேட்டார்.

ராஜா மிகவும் கவலையுடன், "கந்தர்வசேனன் இறந்த விட்டாராம். சனங்களெல்லாம் கவலையோடு இருக்கிறார்கள். அதனால் நானும் அவர்களோடு துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்கிறேன். அது ஒரு ராஜாவின் கடமையல்லவா? " என்றார்.

"அதுசரி, கந்தர்வசேனன் யார்? உங்களுடைய அப்பாவா? அண்ணனா? எதற்காக தலையை மொட்டையடித்தீங்க?" என்று கேட்டார் ராணி. அதன்பின் தான் ராஜா யோசிக்க ஆரம்பித்தார். "ஆமாம்... அதுவும் சரிதான்" என்று நினைத்து அமைச்சரைக் கூப்பிட்டு விபரத்தைக் கேட்டார். அவரும் அதற்குப் பின்தான் யோசிக்க ஆரம்பித்தார். சனங்களைக் கூப்பிட்டு விசாரித்தார். ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டே கடைசியாக அந்த ஆளிடம் போய்ச் சேர்ந்தார்கள். "கந்தர்வசேனன் யார்?" என்று கேட்டார்கள். "என்னுடைய கழுதை" என்றான் அவன்.

ராஜாவும் மந்திரியும் தலையைக் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். எல்லோரும் சொல்வதை கண்ணை மூடிக் கொண்டு நம்ப ஆரம்பித்தால் கதை இப்படித்தான் போய் முடியும். ஸ்ரீ சிவானந்தர் சொன்ன குட்டிக்கதை இது. ஒருத்தர் என்னிடம் வந்தார்.

"சேர், 10 பேர் ஒரே குடையில் வந்தோம். ஆனால் ஒரு சொட்டு தண்ணி கூட யார் மீதும் படவில்லை" என்றார்.

"அது எப்படி" என்றேன்.

"ஏனென்றால்... அப்ப மழையே பெய்யவில்லையே" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் மஹிந்த அரசாங்கத்தின் ஆட்சி கவிழும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஆட்சி 2014 மார்ச் மாதத்துடன் கவிழும். அரசாங்கமே தலையில் மண்ணை வாரிப் போட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்துத தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் காலம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து அரசாங்கத்தை அமைப்பதே புத்திசாலித்தனம்.

அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டமும் இன்றைய பொருளாதார சிக்கல்களும் மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவில் உள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துக்கும் வரிகளை அறவிட்டு அப் பணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் உண்டு வருகின்றது.

கசினோ சூதாட்டக்காரர்களுக்கும் சர்வதேச வியாபாரிகளுக்கும் ஏற்ற வரவு செலவுத் திட்டத்தினை ஆரம்பித்து அப்பாவி மக்களின் வயிற்றில் அடித்துவிட்டனர். இந்த நிலை மேலும் அதிகரிக்கும்.

சர்வதேச நாடுகளிடம் வாங்கிய கடன்களை கட்ட வேண்டுமாயின் மக்களிடம் வரி அறவிட்டு பணத்தைக் கொள்ளையடிப்பது மட்டுமே ஒரே வழி. அதனையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று செய்து வருகின்றார்.

அதேபோல் இன்று அமைச்சர்களே அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட ஆரம்பித்து விட்டனர். அரசாங்கத்தால் கொண்டு வரப்படும் திட்டங்களுக்கு அமைச்சர்களே முரண்பட ஆரம்பித்து விட்டனர்.

விலையேற்றமும், பண நெருக்கடியும் சிறுபான்மை மக்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் என்பதை இன்று பலர் உணர்ந்து விட்டனர்.

எனவே, எதிர்வரும் மார்ச் மாதத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் கவிழ்க்கப்படும். மக்களே அரசாங்கத்தினை வீழ்த்தி புதிய அத்தியாயத்தினை நாட்டில் ஆரம்பிப்பார்கள்.

மேலும், இன்று சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் பணிந்துவிட்டது. மக்கள் மத்தியில் இனவாதத்தையும் பிரிவினையையும் தூண்டுவதற்காகவே ஜனாதிபதி சர்வதேசத்தினை பகைத்துக் கொள்வதைப் போன்று நாடகமாடுகின்றார். ஆனால், அரசாங்கத்தின் சாவி இன்று சர்வதேசத்திடம் அகப்பட்டு விட்டது.

அதன் காரணத்தினால்தான் தற்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின்படி யுத்தத்தில் இறந்த மற்றும் காணாமற் போனோர் தொடர்பில் கணக்கெடுப்பினை மேற்கொள்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# விவசாயிகளுக்கான பயிர்ச்சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி) அலுவலகத்தினால் தொல்புர விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள விவசாயிகளின் பயிர்ச்செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுவழங்கும் முகமாக எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பயிர்ச்சிகிச்சை முகாம் ஒன்று சித்தன்கேணி நாமகள் ச.ச. நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாயிகளின் வயல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு விவசாய விரிவாக்கம், விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாய விதைநடுகைப் பிரிவு மற்றும் தென்னை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே விவசாயிகளை பயிர்களின் பிரச்சினைக்குரிய மாதிரிகளுடன் வருகைதந்து தீர்வுகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் நான்காம் வார செவ்வாய்க்கிழமையில் சித்தன்கேணி நாமகள் ச.ச. நிலையத்தில் இப் பயிர்ச்சிகிச்சை முகாம் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 15 - 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 80 | 120 |
| தக்காளி | 40 | 30 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 50 | 40 | 50 | 80 |
| பூசணி | 20 | 20 | 30 | 50 |
| புடோல் | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 - 40 | 30 | 35 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 - 240 | 200 | 230 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 - 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 20 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 60 |
| பயற்றங்காய் | 50 - 70 | 60 | 30 | 70 |
| லீக்ஸ் | 60 | 60 | 90 | 80 |
| பீற்றூட் | 20 | 40 | 30 | 60 |
| கறிமிளகாய் | 80 - 130 | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 60 - 120 | 100 | 70 | 100 |
| போஞ்சி | 120 | 90 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 - 20 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 - 120 | 80 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 60 | 50 | 40 | 35 - 45 |

# இராசி பலன்

*03.12.2013*
*(கார்த்திகை 17, செவ்வாய்க்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு*
*அமாவாசை காலை 6.33 மணிவரை*
*பிரதமை பின்னிரவு 4.27 மணிவரை*
*அனுசம் காலை 6.26 மணிவரை*
*கேட்டை பின்னிரவு 5.02 மணிவரை*
*இராகுகாலம் 3.15-4.45 மணிவரை*
*சுபநேரம் 10.45-12.15 மணிவரை*

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், மற்றவர்களுக்காக பொறுப்புக் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், பயணங்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பழைய கடனில் ஒரு பகுதியைக் கொடுத்துத் தீர்க்கும் எண்ணம் உருவாகும், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், பிறர் உதவியுண்டு.

**சிங்கம்** தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், பயந்த சுபாவமுண்டு, வாகன சுகமுண்டு.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், நீண்ட நாளைய பிணக்கொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**துலாம்** புதிய வாய்ப்புக்கள் தேடி வரலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், தொலைபேசி வழியில் அனுகூலச் செய்திகள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியை கூட்டும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், போசன சுகமுண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், கட்டடப் பணிகளை தொடர்வீர்கள்.

**மீனம்** உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும், எதிர்பாராத பயணங்கள் கைகூடும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் விற்பனையாளர்களிடம் அதிக வரி அறவிடப்படுகின்றது

## மீனவர்கள் விசனம்

வடமராட்சி கிழக்கு பிரதேச மீனவர்களை சந்தைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர் நோக்கி வருவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி பிரதேச மீனவர்கள் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் பிடிக்கின்ற மீன்களை விற்பனை செய்வதற்காக பளை மீன் சந்தையை நாடுகின்றனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பளை மீன் சந்தையில் மீன்களின் விற்பனையின் போது, நூறு ரூபாவுக்கு 5 ரூபா என்ற அடிப்படையில் வரி அறவிடப்படுகின்றது.


ஆயினும், சந்தையை ஒப்பந்தத்துக்கு பெற்றுள்ள ஒப்பந்தகாரர்கள் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்ட வரியைவிட கூடுதலான வரியை மீனவர்களிடம் அறவிடுகின்றனர்.

இந் நடவடிக்கையினால் தாம் நட்டமடைவதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு சந்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் வைத்து வெளியூர் மீனவர்கள் விற்பனையில் ஈடுபடுவதுடன் அவர்கள் அங்குள்ள உணவகங்களுக்கு தொகையாகவும் மீன்களை வாங்கி வருவதனால் வியாபாரத்தில் வீழ்ச்சி நிலையேற்றப்பட்டுள்ளது எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும், இப் பிரச்சினைகளைத் தீர்த்துத் தருமாறு கோரி பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறித்த பிரதேச சபையின் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ள போதிலும் எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சட்டவிரோதமான இந் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)




# தனியார் கல்வி நிறுவனம் மீது விசமிகள் தாக்குதல்

சுதுமலைப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்று விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறவுள்ளது.

சுதுமலை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள குறித்த தனியார் கல்வி நிலையத்தின் கூரைத் தகடுகள் பிடுங்கி எடுக்கப்பட்டு தளபாடங்கள் உடைக்கப்பட்டு கிணற்றினுள் வீசப்பட்டுள்ளது.

அத்தோடு கல்வி நிலையத்தின் அலுவலகம் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்த அலுமாரிகள் உடைக்கப்பட்டு கோப்புகள், வினாத்தாள்கள் என்பனவும் வீசியெறியப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் இப் பகுதியில் பொலிஸார் ரோந்து செல்கின்ற போதும் இத்துணிகர செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்வி நிலையத்தில் ஏற்பட்ட சேதம் சுமார் ஒன்றரை இலட்சமாகும் என கல்வி நிலைய நிர்வாகி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது! (அ-9-23)

# கோப்பாய், வேலணை அணிகள் இறுதிப்போட்டிக்கு தெரிவு

(மானிப்பாய்)

பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற துடுப்பாட்டத்தின் இறுதிப்போட்டிக்கு கோப்பாய், வேலணை பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையில் 5 பந்துப் பரிமாற்றங்கள் அணிக்கு 6 பேர் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகள் கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது

இச்சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட 15 பிரதேச செயலக அணிகளும் யாழ்.மாவட்ட செயலக அணியொன்றுமாக மொத்தம் 16 அணிகள் பங்குபற்றியிருந்தன.

விலகல் முறையில் நடைபெற்ற ஆட்டங்களின் அடிப்படையில் கரவெட்டி, கோப்பாய், வேலணை,யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலக அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி அணியை எதிர்த்து கோப்பாய் அணி மோதியது. இதன் போது முதலில் துடுப்பெடுத்தாடிய கோப்பாய் அணி 31 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வேலணை-யாழ்ப்பாண அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் அணி 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வேலணை அணி 41 என்ற வெற்றியிலக்கை அடைந்தது.

வேலணை-கோப்பாய் அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படுமென யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (அ-9-23)

# ஆறுகால் மடத்தடி பலசரக்கு கடையில் மீண்டும் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஆறுகால்மடத்திலுள்ள நாராயணன் ஸ்ரோர்ஸ் பலசரக்குக் கடையில் இரண்டாவது தடவையாகவும் திருட்டு இடம்பெற்றுள்ளது.

குறித்த பலசரக்கு கடையில் கடந்த 28 ஆம் திகதி இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இதில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் என்பன திருடப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த கடையில் நேற்று முன்தினம் இரவும் திருட்டு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல் திருட்டு இடம்பெற்றபோது கடையின் கதவில் போடப்பட்டிருந்த 3 பூட்டுக்களும் உடைக்கப்பட்டே திருட்டுச் சம்பவம் நிகழ்த்தப்பட்டிருந்தது.

நேற்றைய திருட்டுச் சம்பவமும் இதே பாணியில் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திருட்டு முயற்சி தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கடை உரிமையாளர் தெரியப்படுத்தச் சென்றபோது நீங்கள் சென்று கடையைத்திறந்து வியாபாரம் செய்யுங்கோ. நாங்கள் பிறகு சும்மா வந்து பார்க்கிறம் என கூறியுள்ளனர்.

இங்கு அடிக்கடி இடம்பெறுகின்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுத்து அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (அ-4)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(மானிப்பாய்)

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் ஒழுங்கமைத்து நடத்தப்படும் "மைலோ" வெற்றிக்கிண்ணத்திற்காக 12 அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அடுத்த மாதமளவில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 5, 6, 7ஆம் திகதிகளில் இளையாணன் மத்திய விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகளில் டயமன், பொர்மர்ஸ் , இளையாண்ன் மத்தி கொலின்ஸ் , நவஜீவன்ஸ், மணற்காடு சென் அன்ரனீஸ் , யங்கம்பன்ஸ் , வல்வை , சென் சேவையர் , கலைமதி , உடுப்பிட்டி யூத் , விண்மீன் ஆகிய விளையாட்டுக் கழகங்கள் அகிய அணிகள் மோதவுள்ளன.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை கழகங்களிற்கிடையிலான "மைலோ" வெற்றிக கிண்ணத்திற்காக போட்டிகள் இடம்பெறுவது இதுவே முதன் முறையாகும்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டுகின்ற அணிக்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாவும் பணப் பரிசு வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-23)

# ஒளி விழா

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த.செல்வகுமார் தலைமையில் நடை-பெறவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகம் அறிவித்துள்ளது. (அ-9-64)






திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலாமுற்றம் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு பேராயர் யோசப் ஸ்பிற்றறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நாடாவெட்டி திறந்து வைத்தார். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிப்படக் கண்காட்சி

யாழ். இந்துக் கல்லூரியின் ஒளிப்படக் கலை கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிழல்களின் நிஜங்கள் எனும் ஒளிப்படக் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து இரண்டு நாட்கள் கல்லூரியின் நூலகத்தில் நடைபெறவுள்ளது.

ஒளிப்படக் கலைக் கழகத்தின் தலைவர் சி.அனுஷாந் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந்த் கலந்து கொள்ளவுள்ளார்.

இக்கண்காட்சி மறுநாள் வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 வரை கண் காட்சியை பார்வையிடலாம். இதில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் கற்பிக்கும் ஆசிரியர்களினால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களே காட்சிப் படுத்தப் படவுள்ளன. (அ-9-23)

## ஆட்டோ குடைசாய்ந்து விபத்தில் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

மூதாட்டி ஒருவரை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்ற முச்சக்கரவண்டி குடைசாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

கொக்குவில் பூநாறி மடத்தடிப் பகுதியில் நேற்று முற்பகல் 8.45 மணியளவில் இடம் பெற்ற இவ்விபத்துச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த முச்சக்கர வண்டி மூதாட்டி ஒருவரை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுள்ளது.

இந்நிலையில் துவிச்சக்கர வண்டியில் வீதியால் பயணித்த முதியவர் ஒருவர் திடீரென்று வீதியை கடக்க முற்பட்டுள்ளார்.

இதன்போது முச்சக்கர வண்டிச்சாரதி வேகத்தை தணித்த போதும் முதியவரை மோதிய முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியின் முற்பகுதி பலத்த சேதமடைந்த போதும் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் எதுவித காயமும் இன்றி பிழைத்துக் கொண்டனர். துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவர் சிறு காயத்திற்குள்ளாகியுள்ளார். (அ-5)

## வெரகளி குளத்தை துப்புரவு செய்யுங்கள்

(கரணவாய்)

துன்னாலை தெற்குப் பகுதியிலுள்ள வெரகளி குளத்தினை இறைத்துத் தருமாறு கால் நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேசத்திலுள்ள கால்நடைகள் இக்குளத்திலேயே நீரை அருந்தி வருகின்றன. ஆனால் தற்போது குளம் அசுத்தமான நிலையில் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது. இதனால் கால்நடைகள் நீருக்காக அலைந்து திரிகின்றன.

எனவே உரியவர்கள் இக்குளத்தை இறைத்துத் துப்புரவு செய்வதோடு குளத்தின் அருகிலுள்ள புற்கள் வெட்டி செல்லப்படுவதை தடுத்து கால்நடைகளின் மேய்ச்சலுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)

## ஜனாதிபதியின் செய்தியுடன் டில்லிக்கு செல்கிறார் பசில்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டை புறக்கணிக்க இந்தியப் பிரதமர் கடும் தொனியிலான செய்தியுடன் இலங்கை வருவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில் அவரைச் சாந்தப்படுத்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ டில்லிக்கு பயணிக்கவுள்ளதாக தெரிய வருகின்றது. இவ்விடம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விரைவில் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அதற்கு முன்னர் இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவராக அமைச்சர் பசில் ராஜபக்ஷ டில்லிக்கு பயணிக்கவுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தையும், பிரதமர் மன்மோகன் சிங்கின் யாழ். வருகையையும் டில்லி இராஜதந்திர வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

வடக்கு முதலமைச்சரின் அழைப்பின் பிரகாரம் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்றும், ஆனால், அதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் தமிழக காங்கிரஸின் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.

அதேவேளை, இந்திய மத்திய நிதியமைச்சரான ப.சிதம்பரமும் பிரதமரின் யாழ். பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தம், அரசியல் தீர்வு விடயம் உட்பட சில விடயங்களில் இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசு இன்னும் நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டு டில்லித் தரப்பால் முன் வைக்கப்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

## கலைவிழா

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழா எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய றமணன் அரங்கில் உபதலைவர் க.சுந்தர காந்தன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உரும்பிராய் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தாக்கி சந்தணு, சிறப்பு விருந்தினராக திருமதி கமலவேணி விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரை சிவஸ்ரீ க.மு ஜெகநாதக் குருக்கள், சிவஸ்ரீ தியாக கிஷ்ண மூர்த்தி குருக்கள் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இவ் விழாவில் நடனம், பாடல்களும் இவ்வாண்டு இம்முன் பள்ளியில் கல்வி பயின்று 2014ஆம் ஆண்டு பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறள்ளன. (அ)

## பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலத்தில் விற்கப்படும் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தை மட்டும் கொடுக்க வேண்டும்என யாழ்.நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-2)

உங்கள் மின் கட்டணத்தில் குறைந்தது 10%-15% நவீன தொழில்நுட்பத்தால் சேமியுங்கள்!!!

5W எல்.ஈ.டி. மின்விளக்கு (35W மின் விளக்கை போன்ற பிரகாசமானது /CFL மின்விளக்கை விட சிறந்தது/6 மாதங்கள் உத்தரவாதம்) 390/- மட்டுமே மற்றும் அவசர மின்விளக்குடன் விசிறி, ரீச்சார்ஜபிள், ப்ளாஷ்லைட், table lamp, சோலர் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

58, CROSSETT LANE, OFF KACHCH ERI NALLUR ROAD, NALLUR, JAFFNA/ Tel: 0789130813/0788745253 email: christiepara@yahoo.co.in

பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை
- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(த/5541)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம் :சதயம் 1
கி.பா: 28.25 செவ் 1இல்
உயரம்: 5' 6"
தகைமை: MSc UK Bio Sciences
தொழில்: Bio Medical Scientist
தொ.இல. B/151

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம் :விசாகம் 2
கி.பா: 23.25 சூரி, செவ் 9இல்
உயரம்: 5' 5"
தகைமை: MBBS
தொழில்: வைத்தியர்
தொ.இல. B/155

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம் :பூரட்டாதி 3
கி.பா: 63.5 சூரி, செவ் 7இல்
உயரம்: 5' 8"
தகைமை: O/L
தொழில்: படப்பிடிப்பாளர்
தொ.இல. B/157

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம் :ரேவதி
கி.பா: 3.75 உயரம்: 5'7"
தகைமை: USSR Doctor
தொழில்: வைத்தியர் (யாழ்ப்பாணம்)
தொ.இல. B/619

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981இந்து (V)
நட்சத்திரம் :மூலம் 1
கி.பா: 43 உயரம்: 5' 3'
தகைமை: BA பட்டதாரி
தொழில்:பட்டதாரி பயிலுநர்
தொ.இல. G/194

பிறப்பு: 1990 இந்து (V)
நட்சத்திரம் :பூரட்டாதி 2
கி.பா: 52 செவ் 4இல்
உயரம்: 5'2"
தகைமை: A/L, ICT
தொழில்: ICT Student
தொ.இல. G/196

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம் :பூசம் 4
கி.பா: 28.25 உயரம்: 5'2"
தகைமை: Sip. in Accounting
தொழில்: முகாமைத்துவ உதவியாளர்
தொ.இல. G/200

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம் :அவிட்டம் 1
கி.பா: 23.25 உயரம்: 5'3"
தகைமை: BSc, MSc Phd
தொ.இல. G/202

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

இணையற்ற சேவையினூடு....

50 ஆவது ஆண்டை நோக்கி
சான்றுகளுடன் சாதனைகள் படைக்கும்
வடமாகாணத்தின் முதற் தர நிறுவனத்தில்
புதிய கல்வி ஆண்டிற்கான
தரம் 01 முதல் O/L வரை
தமிழ் / ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்
Dec 07 ல் ஆரம்பமாகின்றன
அனுமதிக் கட்டண சலுகைகளுடன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
அமைதியான சூழல்
அடிப்படை வசதிகள் அனைத்துடனும்
அனுபவமிக்க ஆசிரியர்களின் உயர்ந்த சேவை
(த/5631)
மழலைப் பூங்கா முன்பள்ளியின்
2014 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன
The Express Institute
Irupalai Junction, Kopay

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 வருடங்களாகியும் மன்னகுளம் பிரதேசத்திற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை

(மல்லாவி)

**வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மன்னகுளம் கிராமசேவையாளர் பிரிவில் உள்ள கிராம மக்கள் மீள்குடியேறி 4 வருடங்களைக் கடந்த நிலையிலும் அடிப்படை வசதிகள் இன்றி அவல வாழ்க்கை வாழ்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் தெரியவருவது,

மன்னகுளம் கிராமசேவகர் பிரிவின் கீழ் புதுவிளான்குளம், புற்குளம், குஞ்சுக்குளம், மன்னகுளம், கொல்லர் புளியங்குளம் என 5 கிராமங்களிலும் 170 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இவர்களுக்கான மின்சார வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப் படவில்லை.

இக்கிராமங்கள் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் எல்லைப்புறமாக இருப்பதனால் வவுனியா மாவட்டத்தில் இருந்து ஏ-9 வீதியிலுள்ள பெரியகுளம் வரையும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏ-9 வீதியிலுள்ள 138 ஆம் மைல்கல் வரையும் வழங்கப்பட்ட மின்சாரம் இரண்டுக்கும் இடைப்பட்ட சில மைல் தூரத்திற்கு நடுவேயுள்ள இக்கிராமங்களுக்கு வழங்கப்படவில்லை.

இதனால் பாடசாலைகளான வ/ கொல்லன்புளியங்குளம், ஸ்ரீராமகிருஷ்ணர் வித்தியாலயம், வ/குஞ்சுக்குளம் பண்டாரவன்னியன் வித்தியாலயம், வ/மன்னகுளம் அ.த.க. பாடசாலை என்பவற்றில் கல்வி பயிலும் மாணவர்களது கணனிக்கல்வி கற்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கணனிகள் கிடைத்தும் மின்சாரம் இல்லாமையால் இக்கணனிகள் பல வருடங்களாக களஞ்சிய அறையில் உள்ளன.

• மேலும் வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதரும் ஆசிரியர்கள் இங்கு தங்கிநின்று மாணவர்களுக்கு மாலைநேரக் கல்வியைப் போதிக்கமுடியவில்லை.

இதேவேளை இங்குள்ள பாடசாலைகள் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை மட்டுமே கல்வி போதிப்பதால் தரம் 7 இற்கு மேல் கல்வி கற்கும் மாணவர்கள் பல மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள மு/மாங்குளம் ம.வி. அல்லது வ/கனகராஜன் குளம் ம.வி.க்கே கல்வி கற்கச் செல்கின்றனர்.

ஆயினும் ஏ-9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் இம்மாணவர்களை ஏற்றாது செல்வதால் மாணவர்கள் பல மணி நேரம் வீதியில் காத்திருக்கவேண்டியுள்ளது.

இதனால் பல மாணவர்கள் இடைவிலகி உள்ளமையைக் காணமுடிகின்றது.

இத்தோடு குஞ்சுக்குளம் மற்றும் கொல்லன் புளியங்குளம் கிராமங்களுக்கு குறுக்கே செல்லும் புகையிரத பாதைக்கு மேல் குடியிருக்கும் குடும்பங்களுக்கு ஏ-9 வீதிக்கு வருவதற்கு உள் வீதிகள் அமைக்கப்படாமையால் குடியிருப்பு காணிகளூடாக வரவேண்டியுள்ளது.

இதனால் குடியிருப்பாளர்களுடன் சண்டைகளுடன் சச்சரவுகளும் ஏற்படுகின்றது. புகையிரதம் வருகின்ற போது வீதித்தடைகளும் ஏற்படுத்தப்படாமையால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே பல்வேறு அடிப்படை தேவைகளுடன் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய இம்மக்களின் தேவைகளை உடன் சம்பந்தப்பட்டோர் தீர்த்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இங்கு வாழ்கின்ற மக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-15)

## மருதமடு குளத்தின் புனரமைப்பு பணிகள் முடிவுறுகின்றன



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலுள்ள மருதமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளது.

யுத்தம் காரணமாக 2008 ஆம் ஆண்டு சேதமடைந்த இந்தக் குளத்தினை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

இந்த நிலையில், 2011ஆம் ஆண்டு 200 மில்லியன் ரூபா செலவில் இந்தக் குளத்தை புனரமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டு தற்போது நிறைவுக் கட்டத்தினை அடைந்துள்ளன.

இந்தக் குளத்தில் சேகரிக்கப்படுகின்ற நீரின் மூலம் 4 ஆயிரம் ஏக்கர் பயிர்ச் செய்கையினை சிறுபோகத்தின்போது மேற்கொள்ள முடியும் என்பதுடன், இதனால் ஆயிரம் விவசாய குடும்பங்கள் பயன்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)




# பருவமழை பொய்த்துள்ளமையால் இரணைமடு குளத்து நீரின் அளவு குறைவு



(கிளிநொச்சி)

பருவமழை பொய்த்துள்ளமையினால் தற்போது இரணைமடுக்குளத்தினுடைய நீரின் அளவு குறைந்து காணப்படுகின்றது.

கிளிநொச்சியிலுள்ள இந்த இரணைமடுக்குளம் வழமையாக நவம்பர் மாத காலப் பகுதியில் நீர் நிறைந்து வான் பாயும் நிலையில் காணப்படும்.

ஆனால் தற்போது நவம்பர் மாதம் முடிவடைந்த நிலையிலும் மழை பொய்த்துப் போயுள்ளதால் இரணைமடுக் குளத்தினுடைய நீரின் அளவு குறைந்து காணப்படுகின்றது.

இவ்வருடம் இரணைமடுக்குளத்தில் போதுமான அளவு நீர் தேக்கி வைக்கப்படாமல் போனால் 2014 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையிலும் பாதிப்பு ஏற்படும் நிலைமை காணப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# வவு. விகாராதிபதி தொடர்பில் மேலும் 5 சிறார்கள் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்ல மதகுருவாகிய கல்யாணதிஸ்ஸ தேரருக்கு எதிராக மேலும் ஐந்து சிறுவர்கள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுவன் ஒருவன் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் வவுனியா அட்டமஸ்கட கல்யாணதிஸ்ஸ தேரர், மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் சிறுவர் இல்லத்தின் பொறுப்பதிகாரி ஆகிய கல்யாணதிஸ்ஸ தேரருக்கு எதிராக ஐந்து சிறுவர்கள் இன்று முறைப்பாட்டினை செய்துள்ளனர்.

முறைப்பாடு செய்த சிறுவன் ஒருவன் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

எம்மை படிப்பதற்காக அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் கொண்டு சென்று சேர்த்து விட்டார்கள்.

ஆனால் அங்கு எமக்கு கல்வி கற்க கூடிய வசதிகள் ஏற்படுத்தித் தரவில்லை. தினமும் தோட்ட வேலை, கல் உடைத்தல் என வேலை வாங்கப்பட்டோம்.

கையில் கிடைக்கும் கொட்டன்கள் மற்றும் மூங்கில் தடிகளால் அடித்ததன் காரணமாக தலையில் பாரிய காயங்கள் ஏற்பட்டன. அதற்கு மருந்துகள் கூட கட்டப்படுவதில்லை.

தலையில் ஏற்பட்ட காயம் துர்நாற்றம் வீசிய போது என்னை வெயிலில் நிற்க விட்டு அந்த புண் ஈரம் காய்ந்ததும் உள்ளே அழைத்தார்.

நான் அங்கிருந்து வீட்டுக்கு செல்ல முற்பட்ட போது என்னை பிடித்து இதைவிட இருட்டறை ஒன்றுக்குள் எம்மை விட்டு வெருட்டினார்கள் எனத் தெரிவித்தார். இதேவேளை, கடந்த வாரமும் ஒரு சிறுவன் முறைப்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

# திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பாராட்டு விழா

(பூந்தோட்டம்)

வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் இருந்து இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி அடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.கருணாநிதி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜா, சிறப்பு விருந்தினராக காத்தார் சின்னக்குளம் கிராமசேவை அலுவலர் பெனடிக்ற், கௌரவ விருந்தினர்களாக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. எம்.தேவசேனா, செந்தில்நாதன், நற்பணி மன்றத் தலைவர் மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப் பாராட்டு விழாவில் இப் பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மூன்று மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 26 மாணவர்களும் பாராட்டப்படவுள்ளனர். (ம-266)

# மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

செக்கடிப்புலவு அ.த.க. பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கே. எஸ். ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய திட்டமிடல் பிரதி கல்விப்பணிப்பாளர் செல்வி. லதாங்கி அம்பிகைபாலன், கௌரவ விருந்தினர்களாக கார்கில்ஸ் வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் ஏ.வி. பீலிஸ் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு. பாலசிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# தாலிக்குளம் அரசினர் பாடசாலையில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு

(பூந்தோட்டம்)

தாலிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்த சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் மா.அரிபூரண நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜாவும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராஜ், தாலிக்குளம் கிராம சேவை அலுவலர் எஸ்.செல்வராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப் பாடசாலையில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த நான்கு மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 16 மாணவர்களும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நுளம்பு கடித்து மனிதன் சாகலாமா?



பொன்.மயில். இராசதுரை
ஓய்வுபெற்ற வைத்திய
பூச்சியியல் ஆய்வாளர்

நுளம்புக்கு மூன்றே மூன்று அறிவுகள்தான் உண்டு. இந்த நுளம்புகளில் இற்றைவரை 3200 நுளம்பு வர்க்கங்கள் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் அனோபிலிஸ் (Anopheles), கியுலெக்ஸ் (Culex), ஈடிஸ் (Aedes) போன்ற இன்னும் பல உபபிரிவுகள் உள்ளடங்குகின்றன.

இதில் ஈடிஸ் எனும் நுளம்பு வர்க்கத்தில் ஈடிஸ் எஜிப்ரை (Aedes Aegipti), ஈடிஸ் அல்போபிக்டஸ் (Aedes Albopictus) எனும் இரு நுளம்புகளுமே டெங்கு (மொழி முறிச்சான் காய்ச்சல்) மற்றும் சிக்கின் குனியா எனும் மரணக்காய்ச்சலைப் பரப்புகின்றன. முக்கியமாக மழைக் காலத்தில் மழைத் தண்ணீரில் வீசியெறியப்பட்ட பல சிறு சிறு பாத்திரங்களில் தேங்கி நிற்கும் மழை நீரில் இவை பல்கிப்பெருகி டெங்கு நோயைப் பரப்புகின்றன. இது பற்றிய விளக்கம் கேள்வி பதில் மூலம் விபரிக்கப்படுகின்றது.

***கேள்வி: மழையில்லாத காலத்தில் இந்நுளம்புகள் எங்கே தங்குகின்றன்?***

**பதில்:** ஆண் நுளம்புகள் 14 நாட்களும் பெண் நுளம்புகள் சராசரி 3 மாதங்களும் வாழ்ந்து வாழ்க்கை வட்டத்தை முடிக்கின்றன. இந் நுளம்புகளின் முட்டைகள் தம்மைச் சுற்றியொரு கூட்டை (cyst) உருவாக்கி அக் கூட்டுக்குள் உறங்கு நிலையில் (estivation) பல வருடக்கணக்கில் உறங்கி மீண்டும் மழைகாலம் வர, மீளுயிர்ப்புப் பெற்றுப் பல்கிப் பெருகுகின்றன.

***கேள்வி: டெங்கு நோயாளிகள் இல்லையெனில் நுளம்புகள் மட்டும் இருக்கும் போது எப்படி இந்நோய் பரவும்?***

**பதில்:** இயற்கையின் படைப்பில் இந்நோயைப் பரப்பும் நுண்ணங்கிகளான (Virus) ஆர்போவைரஸ், சிக்குன்குனியா வைரஸ் என்பன உறங்குநிலையில் இருக்கும் முட்டைக் கலங்களுடனேயே ஒன்றிவாழும் ஆற்றல் உள்ளதனால் நுளம்புகள் பல்கிப் பெருகும்போது டெங்கு நுண் கிருமிகளும் மனிதரிடம் இரத்தம் குடிக்கும் போது உமிழ் நீர்ச்சுரப்பியுடன் மனித உடலினுள் பாய்ச்சப்படுவதனால் டெங்கு நோயாளிகள் இல்லாதவிடத்தும் இக் காய்ச்சல் பரவும் வாய்ப்பு உண்டு.

***கேள்வி: டெங்கு நுளம்புகள் மனித இரத்தம்தானா குடிக்கும்? மிருக இரத்தம் குடிக்காதா?***

**பதில்:** இந்நுளம்புகள் கூடுதலாக நகரப்புறங்களிலேயே சன நெருக்கடியான குடியிருப்புகளிடையே பல்கிப்பெருகுவதனால் படித்த பணக்கார வர்க்கத்தினரையே பாதிக்கின்றது. ஆகவே, வேண்டியளவு மனிதர்கள் இருப்பதனால் மனித இரத்தத்தையே குடிக்கின்றன. மனிதர்கள் இல்லையென்றால் மிருக இரத்தத்தைக் குடித்து அது தன் பரம்பரையை முன்னெடுத்துச் செல்லும் முட்டை வளர்ச்சிக்கு மனித இரத்தமோ மிருக இரத்தமோ இன்றியமையாத தேவையாக இருக்கின்றது என்பது இயற்கையின் நியதி.

***கேள்வி: ஏன் வருடா வருடம் மழைக்காலத்தில் டெங்கு நோய், கடந்த கால கிறிஸ் மனிதன் மற்றும் பேய் பிசாசு போன்று மனிதனை மிரட்டுகின்றது.?***

**பதில்:** மனிதன் தன் பகுத்தறிவான ஆறாவது அறிவை இழந்து அசண்டை (Carelessness), கல்வியறிவின்மை (Illiteracy), சோம்பேறித்தனம் (Laxiness) ஆகிய 3 காரணிகளுக்குள்ளும் அடங்கித் தன்னை மறந்த நிலையில் பணம் ஒன்றே வாழ்வாதாரம் என்று எண்ணி இரவு பகலாக உழைக்க ஆரம்பித்ததனால் இவ்வாறான நிலை என்பதை எவராலும் மறுக்க முடியாது. மற்றையது டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பற்றிய போதிய விளக்கமான அறிவின்மை காணப்படுதல்.

***கேள்வி: டெங்கு நோயைத் தடுக்கவே முடியாதா?***

**பதில்:** உலக சுகாதார நிறுவனம் (World Health Organization) சொல்லியதற்கிணங்க வருமுன் காக்கும் நடவடிக்கையில் (Prevention is better than cure)யாம் இறங்க வேண்டும். இதைச் சிறுவர் பாடசாலையிலிருந்து சர்வ கலாசாலை வரையான சகல வயதினருக்கும் அறிவூட்டல் மூலம் முன்னெடுத்துச் சென்று டெங்கு ஓர் உயிர்க்கொல்லி நோய் என்பதைக் கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், காணொளிப் படங்கள் என்பவற்றின் ஊடாக மக்களை விழிப்படையச்செய்யவேண்டும். நகரங்கள், கிராமங்கள் என்பவற்றிலுள்ள பொது அமைப்புகள்மூலமும்விழிப்புணர்வை முன்னெடுத்துச் செல்வ தன் மூலம் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளை இல்லா தொழிக்கலாம்.




***கேள்வி: டெங்கு நுளம்புகள் மனிதர்களின் இரத்த வேறுபாட்டினை உணர்ந்து தெரிந்து இரத்தம் குடித்து டெங்கு நோயைப் பரப்புமா?***

**பதில்:** இல்லை. அதற்கு மனித இரத்தம் மட்டுமே தேவைப்படும். இதில் சாதி, மதம், இனம், இரத்த வகை (Blood Group) என எவற்றையுமே நுளம்பு பாகுபாடு பார்ப்பதில்லை. ஈடிஸ் வர்க்க நுளம்புக்கு தேவை மனித இரத்தம் மட்டுமே.

***கேள்வி: இவ்வளவும் சொல்லியும் ஏன் மனிதர்கள் கவனத்திற்கொள்வதில்லை?***

**பதில்:** மனிதர்கள் தாம் உழைத்து உண்டு வாழ்ந்தால் போதும் எனும் மனோபாவத்தில் வாழ்கின்றார்கள். அவர்கள் தம்மைப் பற்றியோ தம்மைச்சூழவுள்ளவர்களைப்பற்றியோ அக்கறை கொள்வதில்லை. இதனால் தான் பொலிஸாரின் உதவியுடன் சுகாதாரத் திணைக்கள த்தினர் டெங்கு நுளம்புகள் உண் டாகும் வீசியெறிப்பட்ட பொலித்தீன் பைகள், மழை நீர் தேங்கி நிற்கும் சிறு பொருட்களை வலுக்கட்டாயமாகத் தண்டம் செலுத்தச் செய்து அகற்றுவிக்கின்றார்கள். இது மென்மேலும் தொடரும். ஏனெனில் இன்று மனிதர்களாக வாழ்பவர்கள் ஒருசிலரே.

***கேள்வி: இப்படியான நகர, கிராம மக்களைத் திருத்துவதற்குவேறு வழிகள் உண்டா?***

**பதில்:** உண்டு. மேலுள்ள பந்தியிலுள்ள பதிலில் கூறியது போன்று வயது வித்தியாசமின்றி சாதி, சமய வித்தியாசமின்றி, படித்தவர்கள், படியாதவர்கள், ஏழை பணக்காரர் என்றபேதமின்றி சகலருக்கும் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். முக்கியமாக நகரத் தில் வாழும் படித்த பணக்கார வர்க்கத்தினரையே உயர் வகுப்பினரையே இந்த டெங்கு நோய் மாரிகாலத்தில் தாக்கி இறப்பை ஏற்படுத்துகின்றது என்ற உண்மையை சகலரும் தெரிந்து அதற்கிணங்க நடக்கப் பழக வேண்டும்.

***கேள்வி: இப்படியாகத் தற்காலிக மழைகாலத்தில், மாரி காலத்தில் ஏற்படும் டெங்கு நுளம்புப் பெருக்கத் தைக் கட்டுப்படுத்தும் பொழுது நுளம்பு தன் இனத்தைப் பரம் பரையை முன்னெடுத்துச் செல்ல மாற்று நடவடிக்கையை, எடுக்குமா?***

**பதில்:** இதையே வலம்புரி நாளிதழில் 08.07.2011 தொடக்கம் 19.07.2011 வரையான பன்னிரெண்டு (12) நாட்கள் "நோய் பரப்பும் நுளம்புகளில் ஆய்வு" எனும் ஒப்படை ஆய்வுக்கட்டுரையில் நுளம்புகள் மட்டுமல்ல ஏனைய பூச்சியினங்களும் மாற்று முறைகளை முட்டையிடுவதற்குத் தெரிவு செய்யும் என்றே வலியுறுத்தியிருந்தோம். அதற்கிணங்க தற்போது காலி மாவட்டத்தில் அகங்கம் மெலியகொட கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடொன்றில் உள்ள கழிவறைக குழியிலும் டெங்கு நுளம்புகள் பரவுவதாக 28.10.2013 திங்கட்கிழமை வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. நவீன செய்தியானது மேற்படி கூற்றை உறுதிப்படுத்தியுள்ளது.

## வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபை பொது சன நூலகம் மேன்மையுறு வாழ் வுக்கு வாசிப்பே உந்து சக்தி எனும் கருவூலத்தை மையப்படுத்தி நடத்தும் வாசிப்பு மாத நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை பிரதேச சபை தேவா திறந்த வெளி அரங்கில் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் க.கமலேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண பிராந் திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரைன்ரைன் ஜக்சீல், ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன். வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸ், கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேச சபை உப தவிசாளர் சி.கார்த் திகேசன், வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

## கடன் பெற்றுக்கொண்டது அபிவிருத்திக்காகவே

### ஜனாதிபதி தெரிவிப்பு

அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவே அரசாங்கம் கடனை பெற்றது. ஆனால் அதனை விமர்சிப்போர்பாண் உண்பதற்காக கடனை பெற்றனர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரணை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் கலையரங்கம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 382 மில்லியன் ரூபா கல்விக்காக் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான நிதியுதவிகள் 117 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசவில்லை. அத்துடன் பிரிவேனாவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

எவர் எப்படியான விமர்சனங்களை முன்வைத்தாலும் நாங்கள் முன்னோக்கிச் செல்வோம். நாட்டை கட்டியெழுப்பும் தேவையே எமக்குள்ளது.

நாட்டில் இன்று புனரமைக்கப்பட்ட [illegible] வீதிகளே கிடையாது. [illegible] அபிவிருத்தி செய்யும் பொழுது எம்மை வமர்சிக்கின்றனர். கடன் பெறும் போது வமர்சிக்கின்றனர். அவர்கள் பாண உண்பதற்கு கடன் பெற்றனர். நாங்கள அபிவிருத்திக் காக கடன் பெறுகிறோம.

அதிவேக வீதி ஒன்றை நிர்மாணிக்க 1986ஆம் ஆண்டு ஜப்பானிடம் இருந்து 568 மில்லியன் யென் களை பெற்றுள்ளனர். எந்த அதிவேக வீதிகளும் நிர்மாணிக்கபபடவில்லை.

நாங்கள் கடன் பெற்றோம் அதிவேக வீதிகளை நிர்மாணித்தோம் என்றார். (அ-2)

## திடீர் மரணவிசாரணை அதிகாரிகளுக்கு டிப்ளோமா பயிற்சி

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் 200 இற்கும மேற்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகள் மற்றும் சட்ட வைத்தியர்களுக்கான மரண விசாரணைகள் மற்றும் சட்ட நுணுக்கங்கள மருத்துவ அறிக்கை பற்றிய டிப்ளோமா பயிற்சி நெறி ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

இந் நிகழ்வுக்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கமும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஹிரிம்புருகம மற்றும் மருத்துவ பீட பேராசிரியர் ரவீந்திர பெர்னாண்டோ ஆகியோர் தலைமையில் கடந்த சனிக்கிழமை பொரளையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

இப் பயிற்சி நெறி ஒருவருட தொலைக்கல்வி டிப்ளோமா பாட நெறியாக பயிற்றுவிக்கப்படுகின்றது. மரண விசாரணை மற்றும் நீதி மன்ற வழக்குகளில் மரணங்களில் ஏற்படும் சட்டங்கள், வைத்திய பரிசோதனை அறிக்கைகள் இரசாயன பகுப்பாய்வுகள் பற்றிய அறிவுகளை மேம்படுத்துவதே இப்பயிற்சி நெறியின நோக்கமாகும் . (அ-2)

## கலைப்பட்டதாரிகளுக்கு புதிய பாடத்திட்டங்கள்

கலைப் பட்டதாரிகளுக்கான புதிய பாடத் திட்டங்களை அறிமுகப் படுத்துவதற்கு உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய தொழில்சந்தையை கவனத்தில் கொண்டு புதிய பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்த அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மேலும் கலைப்பட்டதாரி[illegible] வர்களுக்கு தகவல் தொழில் நுட்ப பாடத்தையும் கற்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

வருடந்தோறும் சுமார் 3 ஆயிரம ஆசிரியர்கள் தேவைப்படு கின்றனர்.

ஆசிரிய தொழிலுக்கு பொருத்த மானவர்களாக அவர்களை மாற்றும் பொருட்டு ஏனைய தொழிற் பயிற்சிகளையும் வழங்குவதற்கு எண்ணியுள்ளதாக திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிர சுற்றுலா, கதிரியக்க, தகவல் தொழில்நுட்பம், கிராம அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளில் ஆசிரியர்கள் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)

## பாலஸ்தாபனம்

சரவணை பள்ளம்புலம் முருக மூர்த்தி திருக்கோவில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு விநாயக வழிபாடும் கிரியை களும் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 8.30 மணிவரை பாலஸ்தா பன கும்பாபிஷேகம் பிரதமகுரு சிவஸ்ரீ. நா.யோகீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

655

## ஆலங்குச்சி



நகரத்தை ஒட்டி அமைந்திருந்தது அந்த .அழகியபுரம் என்ற ஒரு கிராமம். பெயருக்கேற்றபடி மிகவும் அழகு வாய்ந்தது அந்தக் கிராமம். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்றுதான் காட்சியளிக்கும். வளமான நீர் நிலைகள் கண்களுக்குக் குளிர்மை சேர்க்கும். ஓங்கி வளர்ந்திருக்கும் பன்னீர் மரங்களிலிருந்து விழுந்து கொண்டிருக்கும் பன்னீர் பூக்கள் பார்ப்பதற்கு பூமழை பொழிவது போல் தோற்றமளிக்கும்.

அளவான வீடுகளுடன் அமைதியான சூழலில் இருந்தது அந்தக் கிராமம். பட்டணத்திலிருந்து அந்த ஊரில் வசிக்கும் பண்ணையார் வீட்டிற்கு அவரது மகளும் பேரனும் வந்திருந்தனர். பேரனுக்கு கிராமம் என்றாலே பிடிக்காது.

"மம்மி... உங்க ஊரு சரியான நாட்டுப்புறம். அந்த வயல் வரப்புக் கள்ல நடப்பது ஐயோ அம்மா... என் கால் எல்லாம் டேர்டி ஆயிடும். படிக்காத உங்க சொந்தக்காரங்க... தம்பி... புள்ள எப்படா வந்த... என ராகம் போட்டு கூப்பிடுவது எல்லாம் எனக்கு பிடிக்காது... மம்மி" என்பான்.

அதைக்கேட்டு மந்தகாசமாக சிரிப்பார் தந்தை. தாய்க்கு அழுகையா வரும். என்ன செய்வது அப்படியே தாங்கிக் கொள்வாள்.

மாலை நேரத்தில் தகப்பனாருடன் மாடியில் நின்று கிராமத்தைப் பார்த்தான் சந்தோஷ். அப்போது நகரத்தின் சூழலிலிருந்து முற்றிலும் வேறுபட்டுக் காணப்பட்ட கிராமத்தின் எழில், அதன் அமைதியான சூழ்நிலை அவன் மனதை கொள்ளை கொண்டது. அதிகாலையிலேயே எழுந்து கையில் பேஸ்ட், பிரஷ்ஷுடன் வெளியே வந்த சந்தோஷை கணக்குப் பிள்ளை அன்போடு அழைத்தார். "தம்பி எங்க ஊரு எப்படி இருக்கு?" என்றபடியே கையில் ஒரு குச்சி, அதை தன் வாயில் வைத்து தேய்த்துக் கொண்டே பேசினார்.

"என்ன தாத்தா இந்தக் குச்சி வைத்து என்ன பண்ணுறீங்க... பேஸ்ட், பிரஷ் எதுவுமே இல்லாம இப்படி குச்சி வைத்து கண்டபடி இழுக்கிறீங்களே... உங்க வாய் தான் புண்ணாயிடாதா?" என்றான். இதைக் கேட்ட முதியவர், "தம்பி! நீங்க பட்டணத்து தம்பி... இங்கிலீசு படிப்பெல்லாம் படிக்கிறீங்க.

பட்டணத்துலேயே வாழ்ந்து பழக்கப்பட்டுப்போன உங்களுக்கு இந்தக் கிராமத்து சூழல் பற்றியும் இங்கு இருக்கிறவர்கள் பற்றியும் தெரிஞ்சிருக்க முடியாதுன்னு நினைக்கிறேன். நான் விபரம் தெரிஞ்ச நாளிலிருந்து இந்தக் குச்சியாலதான் பல் தேய்ச்சிட்டு வர்றேன். அப்படி ஒண்ணும் என் வாய் புண்ணாகிடல. மாறாக என்னோட ஒரு பல் கூட இதுவரைக்கும் விழுந்ததில்லை. ஒரு சொத்தைப் பல் கூட இன்னும் எனக்குக் கிடையாது. காரணம் இது வெறும் குச்சி இல்ல. ஆலங்குச்சி. அதோ அந்த ஆலமரத்திலிருந்துதான் தினமும் ஒரு சிறு குச்சியை ஒடித்து பல் தேய்ப்பேன். உங்க பேஸ்ட், பிரஷ்ல இல்லாத மருத்துவ குணமெல்லாம் இயற்கையான அந்த ஆலங்குச்சியில இருக்கு. ஆலும், வேலும் பல்லுக்கு உறுதி. இதுமட்டுமல்லாம காலையில எங்க ஊர் குளத்தில குளிச்சிட்டுப் போய் பாருங்க உங்களுக்கு கிடைக்கிற புத்துணர்ச்சியே தனிதான். அதுதான் சொல்லியிருக்காங்க. குளிர்ந்த நீரல் குளிச்சா உடம்பு சுத்தமாகிறது மட்டுமல்லாம நம்ம மனசும் குளுமையா இருக்கும். இன்னும் எவ்வளவோ இருக்கு தம்பி. இதெல்லாம் நீங்க அடிக்கடி வரும்போது தெரிஞ்சுக்குவீங்க... டிபன் சாப்பிட்டு விட்டு ரெடியா இருங்க நான் வந்து கிராமத்தை சுத்திப் பார்க்க கூட்டிக்கிட்டு போறேன்" என்றார்.

முதன்முறையா சந்தோஷின் மனதில் கிராமத்தைப் பற்றிய தவறான எண்ணம் மாறியது. காரணம், 15 வயதிலேயே சொத்தைப் பல்... அடிக்கடி பல் வலிக்கும். ஏகப்பட்ட பிரச்சினைகள் சந்தோஷுக்கு. முதன்முறையாக கணக்குப்பிள்ளை சொன்ன ஆரோக்கியமான பற்கள் மற்றும் பச்சைத் தண்ணீரில் குளிப்பதால் ஏற்படும் புத்துணர்ச்சி பற்றி அவர் சொன்னது அவன் மனதை தொட்டது. அம்மா சொல்லும் போது புத்தகத்தில் படிக்கும் போதெல்லாம் ஏற்படாத ஒரு நம்பிக்கை அவன் மனதில் முதன்முறையாக உண்டாகியது.

அத்துடன் அம்மாவின் ஆசைப்படி பத்து நாட்கள் தாத்தா வீட்டில இருந்து கிராமத்து மண்ணின் மான்புகளை தெரிந்துகொள்ளலாம் என நினைத்தான்.

★★★★★★★★★★★★★★★




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1592-எட்வேர்ட் பொனவென்சர் என்ற ஆங்கிலக் கப்பல் இலங்கைத் தீவின் காலியை வந்தடைந்தது.
- 1795-ஜோன் ஜார்விஸ் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார்.
- 1800-மியூனிக் அருகில் ஹோஹென்லிண்டென் எனும் இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தனர்.
- 1818-இலினோய் ஐக்கிய அமெரிக்கவின் 21 ஆவது மாநிலமானது.
- 1903-சேர் ஹென்றி பிளேக் ஆளுநராக நியமனம் பெற்று இலங்கை வந்தடைந்தார்.
- 1904- வியாழனின் ஹிமாலியா என்ற சந்திரன் சார்லஸ் டில்லன் பெரினினால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1912-பால்கன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பல்கேரியா, கிரேக்கநாடு, மொண்டேனேகிரோ, மற்றும் சேர்பியா ஆகியன துருக்கியுடன் போர் நிறுத்த உடன்பாடு கண்டன.
- 1917-20 ஆண்டுகள் கட்டுமானப் பணியின் பின்னர் கியூபெக் பாலம்திறக்கப்பட்டது.
- 1967-தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் கிறிஸ்டியன் பார்னார்ட் தலைமையில் உலகின் முதலாவது இருதய மாற்றுச் சிகிச்சை 53 வயது லூயிஸ் வாஷ்கான்ஸ்கி மீது வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- 1971-இந்திய- பாகிஸ்தான் போரில் இந்தியா கிழக்கு பாகிஸ்தானை முற்றுகையான போர் ஆரம்பித்தது.
- 1973-வியாழனின் முதலாவது மிக அண்மையில் படங்களை பயனியர் 10 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.
- 1989-மால்ட்டாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ், சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கொர்பச்சோவ் ஆகியோர், பனிப் போர் முடிவடையும் கட்டத்தில் உள்ளதாக அறிவித்தனர்.
- 1997-நிலக்கண்ணிவெடிகளைத் தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது தடை செய்யும் ஒப்பந்தத்தில் 121 நாடுகள் ஒட்டாவாவில் கையெழுத்திட்டனர். இதில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஆகிய நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையயெழுத்திடவில்லை.
- 1999-செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்ட Mars polar lander இன் தொடர்புகளை நாசா இழந்தது.
- 2007-இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தேர்வுத் துடுப்பாட்டத்தில் 709 இலக்குக்களை வீழ்த்தி புதிய உலக சாதனை படைத்தார்.

### பிறப்புக்கள்

- 1795-ரோலண்ட் ஹில், நவீன் அஞ்சல் சேவை யைக் கண்டுபிடித்தவர், பிரித்தானியாவைச் சேர்ந்தவர். (இ.1879)
- 1884-ராஜேந்திர பிரசாத், இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி (இ.1963)

### சிறப்புக்கள்

அனைத்துலக ஊனமுற்றோர் தினம்

### ரோலண்ட் ஹில்



ரோலண்ட் ஹில் நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவராவார். இவர் லண்டனின் வோசெஸ்ட்ர்ஷயரிலுள்ள கிடெர்மின்ஸ் எனுமிடத்தில் பிறந்தவர்.

ரோலண்ட் ஹில், சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1837-ஆம் ஆண்டு, தனது 42 ஆவது வயதில் தபால் அலுவலகச் சீர்திருத்தம்: இதன் முக்கியத்துவமும் நடைமுறைச் சாத்தியமும் என்ற அவரது பிரபலமான பிரசுரத்தை வெளியிட் டார். இப்பிரசுரத்தில் அவர் அதிகாரப்பூர்வ, முன்னரே அச்சடிக்கப்பட்ட கடித உறைகளையும் ஒட்டத்தக்க தபால்தலைகளையும் வெளியிட வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினார்.

பிரித்தானியத் தீவுகளுக்குள் எந்த இடத்துக்கும் அரை அவுன்ஸ் நிறையுள்ள தபாலை அனுப்புவதற்குக் குறைந்த சீரான கட்டணமான ஒரு பென்னியை அறவிட வேண்டுமெனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.

1840 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி முதலாவது தபால்தலை வெளியிடப்படுவதற்கு முன்னரே, அதே ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி முன் கட்டணம் செலுத்தப்படக்கூடிய கடித உறையுடன் சீரான பென்னி தபால் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை எழுந்தவுடன் காபி!



ஆன்மீகம் 56

ஜோரான மழை, சுவையான காபி, சூடான பஜ்ஜி. கடலை போட ரெண்டு ப்ரண்ட்ஸ் இதை விட என்ன வேணும் வாழ்க்கைல என்பவரா நீங்கள்... அப்படியே இருந்தாலும் காபி உடம்புக்கு நல்லதா? என்ற சந்தேகமும் தலையெடுக்கிறதா உங்கள் மனதில்? குறைத்துக்கொள்ள வேண்டுமோ என்கிற கேள்வியும் எழுந்துவிட்டதா?

ம்ம்... இந்நிலையில் நீங்கள் தனியாகத் தவிக்கவில்லை. உங்களுக்கு ஏகத்துக்கும் இருக்கிறது துணை...

காபியைப் பற்றி பல வாதங்கள் இவ்வுலகில் பல இடங்களில் நடந்திருக்கிறது.

அது விளைவிக்கும் கேடுகள், அதற்கு இருக்கும் மருத்துவ குணங்கள் என்று பலர் இதில் பிளவுபட்ட கருத்துடனே இருக்கிறார்கள்.

நீரிழிவு நோய், உடல் தளர்ச்சி போன்றவற்றிக்கு காபியைப் போன்ற மருந்தில்லை என்று சிலரும், இதய நோய்கள் புற்று நோய்களுக்கு முக்கிய காரணமே காபிதான் என்று சாடுவதற்கு சிலரும் போர்க்கொடியோடு தயாராக இருக்கிறார்கள்.

வல்லுநர்கள் இப்படி பேறுபட்டு நிற்க, இங்கு காபி பற்றி சத்குருவின் வார்த்தைகளில்...

காபி உங்களை விழிப்புடன் வைக்கிறது. சுறுசுறுப்பாக்குகிறது. கிளர்ச்சியடையச் செய்கிறது.

அதனால் அதற்கு நல்ல சர்டிபிகேட் கொடுத்தே ஆக வேண்டும். அதிலும் மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே காபி குடித்தால் நீங்கள் ஆச்சரியப்படும் அதிசயம் எல்லாம் உங்களுக்கு நடக்கும்.

நீங்கள் ஏதோ வீர அபிமன்யு போல் தெம்பாகக் கூட உணர்வீர்கள்.



ஆனால், தினம் தினம் அதை அருந்தினால் நீங்கள் அதை சார்ந்து வாழ்பவர் ஆகிவிடுவீர்கள்.

காபியை குடித்தவுடன் உங்கள் பயம், கவலைகள் எல்லாம் விலகி விட்டதுபோல தோன்றினாலும் சிறிது நேரத்தி லேயே உங்கள் உடல் இன்னும் கொஞ்சம் காபி வேண்டும் என்று அனத்தத் துவங்கிவிடும்.

ஒரு இரண்டு மாதங்கள் நீங்கள் காபியே அருந்தாமல் ஒதுக்கி வைத்துவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். திடீரென்று ஒரு நாள் காலை எழுந்தவுடன் நல்ல ஸ்டாங்காக ஒரு காபி, அதிகமாக டிகாக்ஷன் சேர்த்து குடித்தீர்கள் என்றால், உங்கள் கைகள் நடுங்குவதை நீங்கள் உணர முடியும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பதில் அவுஸ்திரேலியாவுக்கு வெற்றியா?



2013 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் 543 இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து அவர்களது சொந்த நாட்டிற்கு மீள அனுப்பப்பட்டுள்ளனர்.

ஏனையர்கள் அவுஸ்திரேலியாவின் அயல் தீவுகளான பப்புவா நியூ கினியா மற்றும் நௌரு போன்றவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தீவிரமாக்கப்பட்டுள்ள கடற்கண்காணிப்பு மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பும் நோக்கில் அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை போன்றன இலங்கையிலிருந்து படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் சட்டவிரோதக் குடியேற்றவாதிகளின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளதாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் இலங்கையின் முன்னாள் போர் வலயங்களான கிழக்கு மற்றும் வடக்கிலிருந்து படகுகள் மூலம் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு அவுஸ்திரேலியாவுக்குச் செல்பவர்களை எதிர்பார்த்தளவுக்கு தடுக்க முடியாதுள்ளமை உண்மையான நிலைப்பாடாகும்.

2013 நவம்பர் 07 வரை கிட்டத்தட்ட 2000 வரையான இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவு, அஸ்மோர் கடற்கரை மற்றும் கொக்கோஸ் தீவுகளை வந்தடைந்துள்ளதாகவும் இவர்கள் அனைவரும் ஆபத்தான படகுப் பயணங்களை மேற்கொண்டே அவுஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்துள்ளதாகவும் அவுஸ்திரேலியாவின் சுங்கம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு செயலகம் தெரிவித்துள்ளது. 2012 இல் இதன் மூன்று மடங்கிற்கும் அதிகமான இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவானது தனது நாட்டில் குடியேறிய இலங்கையர்களை முதன்முறையாக 2012 ஒகஸ்டில் திருப்பியனுப்பத் தொடங்கியது. 2013 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் 543 இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து அவர்களது சொந்த நாட்டிற்கு மீள அனுப்பப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் அவுஸ்திரேலியாவின் அயல் தீவுகளான பப்புவா நியூகினியா மற்று நௌரு போன்றவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இலங்கையின் வடக்கு கிழக்கில், படகுப் பயணங்கள் அதிகளவில் ஆரம்பிக்கப்படும் இடங்களில் இவற்றால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாக பல்வேறு விளம்பரப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போது படகுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக இடம் பெறுகிறது. இத்திட்டம் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிகிறது. இவர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படுவது தொடர்பில் வரையப்பட்டுள்ள கொள்கையானது இதில் தாக்கத்தைச் செலுத்துகிறது என இலங்கையில் உள்ள அவுஸ்திரேலியாவுக்கான உயர் ஆணையகத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

26 ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தம் தொடரப்பட்டு, கட்டுமானங்கள் மற்றும் உயிர்கள் போன்றன இழக்கப்பட்ட இலங்கையின் வடக்கில் அதிகளவான மக்கள் தமது நாட்டை விட்டுப் புறப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட இலங்கையின் வடக்கின் பொருளாதாரமானது இன்னமும் மந்தகதியாகவே உள்ளது. இங்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதென்பது மிகவும் கடினமானதாகும். இதனால் மக்கள் தமது உயிர்களைப் பணயம் வைத்து படகுகள் மூலம் இலங்கையை விட்டுத் தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர்.

படகுகள் மூலம் இலங்கையை விட்டுவெளியேறுகின்றவர்களில் அதிகளவானோர் குறைந்த கல்வியறிவைக் கொண்ட, திருமணம் செய்யாத இளைஞர்களாக உள்ள அதேவேளையில் குடும்பத் தலைவர்கள் மற்றும் பெண்கள் போன்றோர் இவ்வாறான ஆபத்தான படகுப் பயணங்களை மேற்கொள்ள முன்வருவதில்லை என பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவகம் தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் வடக்கில் வாழும் மக்களின் வாழ்வாதாரமானது முன்னேற்றமடைந்துள்ளதாகவும், ஆனால் இதனை மேலும் துரிதமாக்குவதற்கு இங்கு அதிகளவில் முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவகத்தின் பொருளியலாளரும் முதன்மை ஆய்வாளருமான முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைவின் வடக்கில் வேலையற்றோரின் சதவீதமானது 2011 இல் 32.8 சதவீதமாகவும் 2012 இல் 27.4 சதவிதமாகவும் உள்ளது. அதாவது வேலையற்றோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், 2012 காணப்படும் வேலையற்றோர் சதவீதமானது இலங்கைத் தீவு முழுவதிலும் ஒப்பிடும் போது இரண்டு மடங்காகக் காணப்படுகின்றன என ஆய்வாளரும் பொருளியலாளரும் முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(தொடரும்)

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் நேர்மையாக ஆராய்கிறது

## இப்படி கூறுகிறார் அமைச்சர் ஹக்கீம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து செயற்பட்டாலும் எதிர்வரும் தேர்தல்களில் அரசுடனோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடனோ கூட்டணியில் இணைந்து போட்டியிடாது தனித்தே போட்டியிடும் என அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பூகொட பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இருந்து கொண்டு ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்தும் இன்றைய அரசாங்கம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை நேர்மையாக ஆராய்ந்து பார்க்க நடவடிக்கை எடுத்தாலும் சில மத அமைப்புகள் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

எந்த இனமும் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றவும் அரசியலில் ஈடுபடவும் உரிமைகள் உள்ளன. இதனை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசுடன் இணைந்து செயற்பட்டாலும் கட்சியின் கொள்கை மற்றும் யாப்புக்கு இணங்க முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் சுயாதீனமாகவே செயற்படும். அதற்கான உரிமை எமக்கு இருக்கின்றது என்றார்.

இந்நிலையில் அமைச்சர் ஹக்கீம் அரசோடு இணைந்திருக்க இன்று பல காரணங்களை கூறினாலும், முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பௌத்த பேரினவாத அமைப்புகள் அரசாங்கத்தின் ஆதரவை பெற்ற அமைப்புகளாகும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் பள்ளிவாசல் உடைப்பு உட்பட பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்திருந்தது.

எனினும் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் அரசுடன் கைகோர்த்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கலை இலக்கிய மன்ற ஆரம்ப ஒன்றுகூடல்

அடையாளமிழந்து வரும் கலை இலக்கியத்தை எழுச்சிபெற வைப்பதற்கு திசைகாட்டி நிறுவனம் கலை இலக்கிய மன்றம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி திசைகாட்டி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆர்வலர்களை பங்குகொள்ளுமாறும் பங்கு கொள்வோர் 021 2219016, 021 5689090 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (அ)

## ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் வெளியிடப்படும் கார்த்திகை மாதத்திற்கான ஞானச்சுடர் வெளி வந்துள்ளது.

இதில் திருமந்திரக் கதைகள், காளமேக பாடல்கள், மானிட வாழ்க்கை, சிறுவர் கதைகள், சைவ சமய வினா விடைகள், திருமுறைக் கதைகள், வாசகர்களுக்கான வினாக்கள் ஆகியவை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. (அ)

## முஸ்லிம் மாணவிகள் நிகாப் அணியத்தடை

(கொழும்பு)

இலங்கை மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவிகள் முகத்தை மூடும் வகையில் நிகாப் அணிய தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு காரணங்களை கருத்திற்கொண்டே பல்கலைக்கழக வளாகத்தினுள் இந்தத் தடை விதிக்கப்பட்டதாக பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் ஏ.கே.டபிள்யூ. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பல்கலைக்கழகத்தில் பயிலும் இரண்டு முஸ்லிம் மாணவிகள் கண்களை மட்டும் தெரியும்படியாக முகத்தை மூடி ஆடையணிய அனுமதி கோரினர்.

இந்நிலையில் பல்கலைக்கழகத்தின் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்த பின்னர் பாதுகாப்பு விடயங்களை கருத்திற்கொண்டு அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

எனினும் முஸ்லிம் பெண்கள் தலையை மறைத்து அணியும் ஹிஜாப் அணியவும் அபாயா அணியவும் எவ்வித தடையும் இல்லை.

எனினும் முகத்தை மறைக்கும் விதமாக ஆடையணிவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். (அ-2)

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யா/மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் இ.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) இ.இராதா, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் ந.குமணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## இலங்கை தமிழர்கள் தொடர்பில் தமிழகத்தில் உரிய தெளிவில்லை

### சிதம்பரம் குற்றச்சாட்டு; ஞானதேசிகன் மறுப்பு

(சென்னை)

இலங்கை தமிழர்கள் தொடர்பில் இந்திய மத்திய நிதியமைச்சர் பா. சிதம்பரம் சென்னையில் கூட்டிய மாநாடு, தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை தமிழர் விடயத்தில் இந்தியாவின் பங்கு என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்ட குறித்த மாநாடு சிதம்பரம் தனிப்பட்ட ரீதியில் ஏற்பாடு செய்த மாநாடாக அமைந்திருந்தது.

இம் மாநாட்டில் தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகன் பங்கேற்கவில்லை.

இந் நிலையில் தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர்கள் இலங்கை தமிழர்கள் தொடர்பில் உரிய தெளிவாக்கலை தமிழகத்தில் மேற்கொள்ளவில்லை என்று பா. சிதம்பரம் இந்த மாநாட்டின் போது குற்றம் சுமத்தினார்.

எனினும் இதனை மறுத்துள்ள ஞானதேசிகன், இவ்வாறான 7 மாநாடுகளை தாம் நடத்தியுள்ளதாகவும் அதில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார.

இதேவேளை, காங்கிரஸின் தலைமை இன்னமும் தமிழ் நாட்டுக்கென்று மாவட்ட அலுவலக தலைமைகளை நியமிக்காமை இவ்வாறான கூட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு வாய்ப்பை தரவில்லை என்றும் ஞானதேசிகன் குறிப்பிட்டார்.

அத்துடன் குலாம் நபி ஆசாத்துக்கு பதிலாக தமிழக காங்கிரஸ் செயலாளர் ஒருவர் பதவியேற்காமையும் தமிழக காங்கிரஸ் தரப்பில் தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்தார். (அ-2)

## பிரி. பிரஜை கொலை வழக்கில் ஸ்கைப் தொழில்நுட்பம்

தங்காலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜை குரம் ஷேக்கின் விசாரணையின் போது ஸ்கைப் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படவுள்ளன.

அத்துடன், நீதிமன்றம் கோருமானால் ஏனைய நவீன தொழில்நுட்பங்களையும் குறித்த வழக்கு விசாரணையின் போது ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக நீதியமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது அமைச்சு நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களிலும் ஒலிப்பதிவு மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தங்காலையில் கொலை செய்யப்பட்ட பிரித்தானியா பிரஜையுடன் இருந்த ரஷ்ய பெண்ணை வீடியோ தொலைபேசி மூலம் சாட்சியமளிக்க வைக்க கொழும்பு மேல்நீதிமன்றம் ஆலோசித்து வருவதாக மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நீதிமன்ற கூண்டுக்குள் இருந்து தரப்படும் சாட்சிக்கும் ஸ்கைப் மூலம் பெறப்படும் சாட்சிக்கும் இடையில் சூழ்நிலை காரணமாக முரண்பாடுகள் ஏற்படலாம் என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-2)

## மாநாட்டு மண்டப தீப்பரவலில் 200 கண்டுபிடிப்புக்கள் நாசம்

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் தற்காலிக கட்டட தீ விபத்தின் போது சுமார் 200 கண்டு பிடிப்புக்கள் நாசமாகியுள்ளன.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அமர்வின் போது ஊடக நிலையமாக பயன்படுத்தப்பட்டு வந்த பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் தற்காலிக கட்டடம் அண்மையில் எரியுண்டது.

சுற்றாடல்துறை அமைச்சினால் புதிய கண்டுப்பிடிப்பாளர்களின் கண்காட்சி ஒன்று இந்த கட்டடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த கண்டுபிடிப்புகளில் ஒன்றான பெற்றோலில் இயங்கும் அடுப்பு ஒன்றை இயக்கியபோது தீ ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக அங்கு கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 200 புதிய கண்டுபிடிப்புக்கள் நாசமாகின. குறித்த கட்டடம் வெறுமபிளாஸ்ரிக்கினால் அமைக்கப்பட்டிருந்தமை காரணமாக தீ விரைவாக பரவி முழுமையாக கட்டடத்தையும் அழித்தது.

இதன்பின்னரே தீயணைப்பு படையினர் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறித்த மண்டபம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டு 15 நிமிடங்களில் தீக்கிரையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



இளவாலை வாலிபர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு அண்மையில் நாவலடி கலைமகள் படிப்பகத்தில் நடைபெற்றபோது...
(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

கவனிக்க வேண்டியவை

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இல 1-40 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாக்களுக்குமாக வழங்கப்பட்டுள்ள கூண்டில் நீர் தெரிவு செய்த விடைக்கான இலக்கத்துக்கு பொருத்தமான கூண்டினுள் (x) அடையாளமிடுக.
- விடைப்பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்துச் செயற்படுக.

## வரலாறு -I

(நேற்றைய தொடர்ச்சி.....)

21. இலங்கை மக்கள் சட்ட அதிகாரம் தொடர்பாவதற்கான சந்தர்ப்பமானது.
   1. பாராளுமன்றத் தேர்தல் 2.பொதுஜன அபிப்பிராயம்
   3.ஜனாதிபதித் தேர்தல் 4.மாகாண சபை தேர்தல்

22.கீழே தரப்பட்டுள்ள வெளிப்பாடுகளில் சரியான இரு வெளிப்பாடுகளையும் தெரிக
   A-1978 அரசியல் யாப்புக்கு ஏற்ப மந்திரி சபையினைத் தீர்மானிப்பவர் பிரதம ராவார்.
   B- மந்திரி சபையானது பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது.
   C-பாராளுமன்றத்தில் சட்டம் ஜனாதிபதியின் கையொப்ப மூலம் அங்கீகரிக்கப்படும்.
   D- இலங்கையில் இறுதி மேன்முறையீட்டு நிறுவனம் உச்ச நீதிமன்றமாகும்.
   1. B,D 2. C,D 3. A,C 4. C,A

23. முஹம்மது நபி அவர்கள் மரணித்து, பத்து வருடங்களுள் அதிக பிரதேசங்களில் இஸ்லாம் பரவியது. அவற்றுள் பொருத்தமற்ற பிரதேசமானது.
   1. சிரியா 2. ஆப்கானிஸ்தான் 3. எகிப்து 4.ஈராக்

24. -ஆப்கான் பரம்பரையில் சிரேஷ்டமானவராகல்
   -இந்தியாவில் பொது மதம் தோற்றத்துக்கு உற்சாகமளித்தல்
   -மாலிக்கபூர் எனும் திறமையான சேனாதிபதியை வைத்திருந்தமை
   மேற்குறித்த கூற்றுக்களுக்குப் பொருத்தமான டில்லி சுல்தான் ஆட்சியாளர்
   1. முஹம்மது பின் துக்லக்
   2.குருபுதீன் ஐபெக்
   3. அலாவுதீன் கல்ஜி
   4. கப்தியார் கல்ஜி

25.இந்தியாவில் நிலவிய பிரதேச இராச்சியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இந்து மற்றும் முஸ்லிம் இராச்சியங்கள் இரண்டையும் குறிப்பிடும் விடையானது.
   1. பஹமதி- அஹமது நகர்
   2. பிஜாபுர்- கொல்கொண்டா
   3. மால்வா- பிதார்
   4. வரங்கல்- வங்காளம்

26. ஐரோப்பாவில் மானிய முறையின் ஆரம்பத்துடன் பிரதானிகளுக்கு அரசனால் வழங்கப்பட்ட அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் பிழையானது.
   1.அரசனின் வருமான மார்க்கமான நிலம் உரித்துடையதாக்கல்
   2.மக்கள் தொடர்பாக நீதிமன்ற அதிகாரம் உரித்துடையதாக்கல்
   3. நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரம் வழங்குதல்
   4. வெளிநாடுகளுடன் நடைபெற்ற வர்த்தகம் உரித்துடையதாக்கல்.

27.ஐரோப்பாவில் நிகழ்ந்த மதச்சீர்திருத்த இயக்கப் பிரதிபலனை காட்டும் விடையானது.
   1.நாடுகளைக் கைப்பற்றிக் குடியேற்ற நாடாக்கல்
   2. பரிசுத்த ரோமப் பேரரசின் செல்வாக்குக் குறைதல்
   3.கிறிஸ்தவ இயக்கம் லௌகீகத்துக்கு சாருதல்
   4.அரசுகளது அதிகாரங்களுக்கு மேலாக மதகுருமாரின் அதிகாரம் உயர்தல்

28.ஐரோப்பாவின் மறுமலர்ச்சியைத் தோற்றுவிப்பதற்குக் கிட்டிய காரணியானது.
   1.ஐரோப்பாவின் வர்த்தக முன்னேற்றமாகும்.
   2.ஐந்தாம் நிக்கலஸ் பாப்பாண்டவர் வத்திகானில் நூல் நிலையம் ஏற்படுத்துவதற்கு அனுசரணை வழங்குதல்
   3.ஒட்டோமான் துருக்கியர் கிழக்கு உரோம பேரரசின் தலைநகரைக் கைப்பற்றல்
   4.செல்வந்தக் குடும்பங்கள் கலைத்துறைக்கு அனுசரணை வழங்குதல்.

29. கீழே குறிப்பிடப்பட்டவை கைத்தொழில் புரட்சியின் புதுக் கண்டுபிடிப்புகளும் மற்றும் அதற்குப் பொருத்தமான நபர்களுமாவர். எனவே X நிரலை B நிரலுடன் பொருத்த வருவதானது.

| X நிரல் | B நிரல் |
|---|---|
| 1. ஜோஹனன்னஸ் கூட்டன் பேர்க் | A சூரிய மண்டலம் |
| 2. நிக்கலஸ் கொப்பர்நிகஸ் | B சித்திரக்கலை |
| 3. வில்லியம் ஹாவே | C வைத்தியம் |
| 4. வாஸ்கொடகாமா | D அச்சுக்கலை |
| | E தேச சஞ்சாரம் |

   1. DEBA 2.DACE 3.EABC 4.DCBE

30.பிரான்ஸியப் புரட்சிக்கு வழிகோலிய மானிடவாதக் கருத்தை வெளிப்படுத்திய சிந்தனையாளர்
   1.அரிஸ்டோட்டில், ஹிபோக்கிரடீஸ், வோல்டேயர்
   2.மொன்டஸ்கியு, வோல்டேயர்,ரூஸோ
   3.வோல்டேயர், பெற்றாக், ஹெரடோடஸ்
   4.தாந்தே, பெற்றாக், பொக்காஹியோ

31. அவுஸ்திரேலியாவில் சான்சலரான மெட்டர்னிக் சார்ள்ஸ் பார்ட் ஆணை மூலம் ஏற்பட்டது.
   1.சமூகவுடைமை நோக்கம் ஒழித்தல்
   2.வரிப்பண மீள் இயக்கம் ஏற்படுத்தல்
   3.லிபரல்வாதம் (தாராண்மை) கருத்து உருவாவதைக் கட்டுப்படுத்தல்
   4.ஜேர்மனியை ஐக்கியப்படுத்தல்

32.கி.பி. 1857 இல் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சியில் முக்கிய பிரதிபலனானது.
   1.பிரித்தானியரின் தந்திர முறைகளால் புரட்சி அடக்கப்பட்டது.
   2.வர்த்தக சங்க ஆட்சி முடிவுக்குக் கொண்டுவந்து இந்தியாவைப் பிரித்தானிய மயப்படுத்திக் குடியேற்றமாக்கல்
   3.இந்திய மக்களிடையே தேசாபிமான உணர்வு வளர்த்தல்
   4.இந்திய மக்களின் தேவைகளைப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் விளங்குதல்

33.பிரித்தானியருக்கு எதிராக மகாத்மா காந்தி அவர்கள் செயற்படுத்திய சிவில் சட்ட மீறும் இயக்கம் ஆரம்பமானது.
   1.சமர்மிதி ஆச்சிரமத்திலிருந்து தண்டி கடற்கரை வரை சென்ற பாத யாத்திரையாகும்.
   2.தொழிலாளர் ஒப்பந்தக் கடிதம் நிராகரிப்புக்குக் கொண்டு சென்ற சத்தியாக்கிரக இயக்கம்
   3.பிரித்தானியாவில் உற்பத்திப் பொருள் நிறுத்தப்படல்
   4.பிரித்தானியரைத் துரத்துவதற்காக இந்தியாவிலிருந்து கைவிடப்பட்ட வர்த்தகம் ஆரம்பம்.

34. ✷தேசிய சங்கத்திலிருந்து விலகி முன்னேற்றக் கட்சி ஆரம்பித்தல்
   ✷பர்மா மற்றும் மலாயா சென்ற பிரித்தானியருக்கு எதிராகப் படை திரட்டல்
   ✷விமான விபத்தொன்றில் இறத்தல்
   இந்த நிகழ்வுடன் தொடர்புபட்ட நபர்
   1. தடாபாய் நபரோகி
   2.சுரேந்திரநாத் பானர்ஜி
   3. விஜின் சந்திரபோஸ்
   4.சுபாஸ் சந்திரபோஸ்

35. 17 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பாகத்திலிருந்து சோகுன்களால் வழி நடத்தப்பட்ட ஜப்பானின் தனிமைக் கொள்கை வீழ்ச்சியானது
   1. கொமாடோ பியுரியின் புகைக்கப்பல் டோக்கியோ குடாவில் நுழைதல்
   2.கி.பி. 1859 ஹெரிஸ் டவுன்ஸ் சென்ட் சோக்குன்களுடன் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தியதிலிருந்து
   3.சேகுன்களது ஆட்சி கைவிடப்பட்டதிலிருந்து
   4.பேரரசு மூலம் மானிய முறை ஒழிக்கப்பட்டதிலிருந்து

36. கி.பி. 1959 மாவோ சேதுங்கின் தலைமையில் சீனாவில் அறிமுகப்படுத்திய முன்னோக்கிப் பாய்ச்சல் எனும் வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமானது.
   1.கைத்தொழில் துறையில் அவசரமான முன்னேற்றம் ஏற்படுத்தல்
   2.விவசாயத் துறையில் வேகமான முன்னேற்றம் ஏற்படுத்தல்
   3. தமிழ் மட்டத்தில் கலாசாரப் புரட்சி ஏற்படுத்தல்
   4. வெளிநாடுகளுடன் இராஜதந்திரத் தொடர் வளர்ச்சி அடைதல்

37.1 ஆம் உலகப் போரின் பின் ஐரோப்பாவில் நிலவிய ஏகாதிபத்திய வல்லரசுகள் வீழ்ச்சியடைந்து புது அரசுகள் தோற்றம் பெற்றன. அவ்வாறு உருவான புது அரசுகள் இரண்டினைக் குறிக்கும் விடையானது
   1. பின்லாந்து- ருமேனியா
   2.ஈராக்- ஸ்டென்புல்
   3.ஜேர்மனி- போலந்து
   4. துருக்கி- அவுஸ்திரேலியா

38.மனித உரிமை பாதுகாக்கத் தற்போதைய உலக சமூகம் ஈடுபட்டுள்ளதானது
   1.சமூகவுடைமை கருத்து உலகில் வளர்ந்ததிலிருந்து
   2.மானிட வாதம் உலகில் விரிவடைந்தவுடன்
   3.லிபரல் வாதம் வெளிப்பட்டதுடன்
   4.கற்ற மானுடவாதிகளின் தேச சஞ்சாரத்துடன்

39.ரஷ்ய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தில் விவசாயத் துறையில் முக்கிய பங்களிப்புக் கிடைக்கக் காரணம்
   1.கூட்டுறவுப் பண்ணை வேலைத்திட்டம்
   2. கைத்தொழில் துறையில் புது முன்னேற்றம்
   3.இரசாயன உரம் அதிகம் இடுதல்
   4. பயிர் மாற்று முறை

40. இரண்டாம் உலகப் போரில் அழிவுக்கு உட்பட்ட ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பான் மீண்டும் கட்டியெழுப்புவதற்குப் பெரியளவில் உதவிய இயக்கமானது.
   1. நேட்டோ இயக்கம்
   2.சியாட்டோ இயக்கம்
   3.மார்சல் இயக்கம்
   4.வார்சோ திட்டம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் சீனா!



இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக, அண்மையில் சீனா வெளியிட்ட கருத்து, பெரும் சர்ச்சைக்குரியதொன்றாக பார்க்கப்பட்டது.

ஏனென்றால், இலங்கை தொடர்பாக, சீனா இதுவரை அத்தகைய கருத்தை முன்னெப்போதும் வெளியிட்ட ஒரு நாடல்ல.

போரின்போதும் சரி, அதற்குப் பின்னரும் சரி, மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்ததா? இல்லையா என்றெல்லாம் கொஞ்சம் கூட கவலைப் படாத நாடு அது.

அவ்வாறு மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்திருந்தாலும் கூட அது இலங்கையே தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினை என்றே சீனா கூறி வந்தது.

பல சந்தர்ப்பங்களில், மனித உரிமை, அரசியல் தீர்வு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இந்தியா அழுத்தம் கொடுத்தபோது, சீனா உண்மையான நட்புறவையே கொண்டுள்ளது என்று இலங்கையின் அரசியல் தலைவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஏன் எதற்கு என்று கேட்காது பணத்தைக் கொடுக்கிறது- உள்நாட்டு விவகாரங்களில் எப்போதுமே தலையிட்டதில்லை, சர்வதேச அளவில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுகின்றபோது, உற்ற தோழனாக நின்று கை கொடுக்கும் நாடு என்று சீனாவைப் பற்றி ஜனாதிபதியும் அமைச்சர்களும் வெகுவாகப் புகழ்ந்துரைத்துள்ளனர்.

ஒரு வகையில் இது இந்தியாவின் தலையீடுகளை விசனத்துடன் வெளிப்படுத்துவதற்கான கருத்தாகவும் அமைந்திருந்தது.

அதேவேளை, உலகின் மற்றெல்லா நாடுகளும், மனித உரிமைகளைப் பற்றியும் அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குறித்தும் விமர்சனங்களை எழுப்பிக் கொண்டிருக்க, சீனா மட்டும் எதைப் பற்றியுமே கேள்வி எழுப்பாமலும், அதேவேளை தேவையான நிதியுதவிகளையும் செய்து கொண்டிருந்தது.

இது அரசாங்கத்துக்கு மிகவும் பிடித்தமான அணுகுமுறையாகப்பட்டது. அதனால் தான் போருக்குப் பின்னரான- கடந்த நான்கரை ஆண்டுகளில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இன்னும் அதிகமாக நெருக்கமடைந்தன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான முதலாவது தீர்மானம் 2012 இல் கொண்டு வரப்பட்டபோது பேரவையின் ஒரு உறுப்பு நாடாக இருந்த சீனா, அதனைத் தோற்கடிக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டது.

இரண்டாவது முறையாக கடந்த மார்ச் மாதம் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது சீனா பேரவையில் உறுப்புரிமை கொண்டிராத போதும் வெளியிலிருந்து இலங்கைக்கு பக்கபலமாக செயற்பட்டது. இப்போது மீண்டும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சீனா அங்கத்துவத்தை பெற்றுள்ளது.

வரும் ஜனவரி 1 ஆம் திகதி முதல் சீனா, ரஷ்யா, கியூபா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட 14 நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவாகியுள்ளன.

இந்தநிலையில் தான், இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பான சீனா கருத்து வெளிப்பட்டது.

கொமன்வெல்த் மாநாடு நடைபெற்ற சூழலில் மனித உரிமைகள் விவகாரத்தால் இலங்கை கடுமையான அழுத்தங்களுக்குள்ளாகியுள்ளது குறித்து எழுப்பபட்ட கேள்விக்கு பதிலளித்த சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், கயின் கங், மனித உரிமைகளை பாதுகாக்கவும், ஊக்கிவிக்கவும் இலங்கை முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் அதற்கு உலக நாடுகள் உதவிகளை வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சீனாவின் இந்தக் கருத்து அதுவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவாகி ஒருவாரம்கூட ஆகாத நிலையில் வெளியான இந்தக் கருத்து பெரும் ஆச்சரியத்தை அளித்தது.

இது இலங்கைக்கு எதிராக சீனாவும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது போன்று ஊடகங்கள் பலவும் செய்திகளை வெளியிட்டன. அதாவது இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாடு மாற்றம் பெற்றுள்ளதான கருத்து, உள்ளூர் ஊடகங்களில் மட்டும் வெளியாகவில்லை.

பி.ரி.ஐ. போன்ற செய்தி நிறுவனங்களை நம்பியுள்ள இந்திய ஊடகங்களும்கூட, இதே கருத்தைத்தான் வெளிப்படுத்தின. இலங்கை அரசாங்கத்துக்கும்கூட சீனாவின் இந்தக் கருத்து சற்று அதிர்ச்சியைக் கொடுத்ததாகவே தகவல்கள் உள்ளன.

ஏனென்றால், மிகவும் முக்கியமானதொரு கால கட்டத்தில், மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கை மீது முன்னெப்போதும் இல்லா தளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வரும்நிலையில், சீனாவும் இப்படியொரு கருத்தை முன்வைத்ததையிட்டு இலங்கையால் நிச்சயம் நிம்மதியாக இருந்திருக்க முடியாது.

இன்று இலங்கையின் பொருளாதார, வெளிவிவகார நகர்வுகள் அனைத்துமே, சீனாவை மையப்படுத்தியதாகவும் அதனை ஆதாரமாக கொண்டதாகவும் இருக்கிறது.

இதனால் சீனாவின் இந்தக் கருத்து இலங்கைக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம் சீன வெளிவிவகார அமைச்சின் கருத்து தொடர்பாக விளக்கமளித்து, கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அது முக்கியமாக இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்பதை வலியுறுத்துவதற்காக வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.

ஏனென்றால், இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாடு மாறியுள்ளதாக ஊடகங்களில் வெளியான கருத்து, மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு, சீனாவிடம் முறையிட்டதாகவும் தகவல்கள் உள்ளன. இதையடுத்து அப்படி எந்த மாற்றமும் இல்லை என்று குறிப்பிட்ட அறிக்கை வெளியிட்டது சீனத் தூதரகம்.

அதில் சீன வெளிவிவகார அமைச்சின் கருத்தை ஊடகங்கள் தவறாக புரிந்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

தேசிய நல்லிணக்கத்தை நோக்கி மனித உரிமைகளை ஊக்குவிப்பதில் முன்னேற்றத்தை எட்ட இலங்கைக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவு அளிக்கும் என்றும் இலங்கையின் உறுதிப்பாட்டிற்கான உகந்த சூழலை உருவாக்குவதற்கான புறச்சூழலை உருவாக்க உதவ வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் சீனா கோருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பீஜிங்கில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெளியிட்ட கருத்தை இந்த அறிக்கை நிராகரிக்கவில்லை.

அதாவது, மனித உரிமைகளை வைத்து இலங்கைக்கு வெளியக அழுத்தங்கள் கொடுக்கப்படுவதை சீனா, எதிர்க்கின்ற போதிலும், மனித உரிமைகளை பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும் என்ற கருத்தை அந்த நாடு வலியுறுத்தத் தொடங்கியுள்ளது.

சீனாவைப் பொறுத்த வரையில் மனித உரிமைகளைப் பற்றி அதிகம் கவலைப்படாத நாடு என்பது உலகறிந்த உண்மை. இரும்புப்பிடிக்குள் நாட்டை ஆளும் சீனத்தலைவர்கள், அங்கு மனித உரிமைகள் பற்றிய விவாதங்கள் எழுவதை எப்போதுமே விரும்புவதில்லை.

தியனென்மென் சதுக்கத்தில் நடந்த மாணவர்களின் போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்கிய நாடுதான் சீனா.

ஆயிரக்கணக்கான மாணவர்களைப் பலியெடுத்த அந்த நிகழ்வு, சீனாவுக்கு இன்றும் ஒரு கறுப்பு அடையாளத்தையே கொடுக்கிறது.

இப்போது சீனா அந்தளவுக்கு இறுக்கமான நிலையைக் கொண்டிருக்காது போனாலும், கொஞ்சமாவது மனித உரிமைகள் குறித்து சிந்திக்கவும் பேசவும் தொடங்கியுள்ளது.

ஏனென்றால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, ஒரு வலுமிக்க அமைப்பாக மாறத் தொடங்கியுள்ள நிலையிலும், அது ஐ.நா பாதுகாப்புச் சபையைப் போன்றல்லாது, வீட்டோ அதிகாரம் கொண்ட அமைப்பாக இல்லாத நிலையிலும் உலகளவில் தன்னை வலுப்படுத்திக்கொள்ள சீனாவுக்கு இந்த மாற்றம் தேவைப்படுகிறது.

எனவே, சீனா மனித உரிமைகள் தொடர்பான தனது கொள்கைகளையும்- நிலைப்பாடுகளையும் சற்று மாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

அமெரிக்காவை விடவும் மேலான சக்தியாக மேலெழ விரும்பும் சீனாவுக்கு மனித உரிமைகள் ஒரு தடையாக மாறிவிடக்கூடாது என்ற கருத்து இருப்பதாகத் தெரிகிறது.

எனவே, மனித உரிமைகள் தொடர்பாக சீனாவும் தனக்குள்ள கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் உள்ளது. அத்தகைய பொறுப்புணர்வின் வெளிப்பாடாகவே இலங்கை தொடர்பான சீனாவின் கருத்து வெளிப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதனை இலங்கை தொடர்பாக சீன நிலைப்பாட்டின் பெரிய மாற்றமாகவோ, இலங்கைக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் கருத்தாகவோ கருத முடியாது. அதேவேளை இது இலங் கைக்கு முற்றிலும் சாதகமான சூழலும் அல்ல.

வரும் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான கொள்கையை சீனா சூசகமாக வெளிப்படுத்தும் என்ற சிலர் நம்புகின்றனர். அது நடக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் உள்ளோரின் சொத்துக்கள் அரசுடைமை

## புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்தம் காரணமாக நாட்டை விட்டு முழுமையாக வெளியேறி வாழ்ந்துவரும் மக்களின் சொத்துக்களும் அரசுடைமையாக்கப்படும் என புள்ளிவிபரத்திணைக்கள பணிப்பாளர் டி.சீ.ஏ. குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் வடக்கிலிருந்து 10 முதல் 11 இலட்சம் பேர் வெளியேறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வல்வெட்டித்துறை மற்றும் வன்னியில் உள்ள இரண்டு வீடுகள் உட்பட போர் காரணமாக வெளிநாடுகளுக்கு சென்று அங்கு வசித்து வரும் அதிகளவானவர்களின் சொத்துக்கள்அரசுடைமையாக்கப்பட உள்ளதாக தெரியவருகிறது.

வல்வெட்டித்துறை மற்றும் வன்னியில் அமைந்துள்ள பிரபாகரனின் இரண்டு வீடுகளை அரசுடைமையாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

போர் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் வடக்கு மக்களின் சொத்துக்களும் இவ்வாறு அரசுடைமையாக்கப்படவுள்ளன.

அண்மையில் குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கணக்கெடுப்பின் போது பிரபாகரனினால் பயன்படுத்தப்பட்ட இரண்டு வீடுகள் உள்ளிட்ட பல சொத்துக்கள் உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

பிரபாகரனின்வீடுகளுக்கு உரிமை கோர அவரது குடும்பத்தில் எவரும் உயிரோடு இல்லை என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அத் திணைக்களத்தின் பணிப்பாளர் டி.சீ.ஏ. குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.1982ஆம் ஆண்டின் பின்னர் போர் காரணமாக ஏற்பட்ட சொத்து மற்றும உயிர்ச் சேதங்கள் தொடர்பிலான கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போர் காரணமாக முழுமையாக நாட்டை விட்டு வெளியேறி வாழ்ந்து வரும் மக்களின் சொத்துக்களும் இவ்வாறு அரசுடைமையாக்கப்படவுள்ளன.

யுத்தம் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட சொத்து சேதங்கள் தொடர்பாக சரியான தகவல்களை கண்டறிவதற்காக புள்ளிவிபரத் திணைக்களம் ஆரம்பித்துள்ள கணக்கெடுப்பில் பிரபாகரனின் வீடுகள் உட்பட உரிமை பாராட்ட எவரும் இல்லாத அதிகளவானவர்களின் சொத்துக்களை கணக்கெடுப்பில் சேர்ப்பதில்லை என திணைக்களத்தின் பணிப்பாளர் தீர்மானித்துள்ளார்.

புலிகளின் தலைவருக்கு இரண்டு வீடுகள் உள்ளன. முதலாவது வீடு யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையிலும் இரண்டாவது வீடு வன்னியிலும் இருக்கின்றன.

பரபாகரனின் தந்தையும் தாயும முதலாவது வீட்டில் 80ஆம் ஆண்டின் ஆரம்பகாலத்தில் வசித்து வந்தனர். யுத்தம் ஏற்பட்டதை தொடர்ந்து அவர்கள் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்.

2002 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு சமாதான பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் அவர்கள் மீண்டும் இலங்கை திரும்பினர். எனினும் முதலாவது வீட்டில் எவரும் வசிக்கவில்லை.

அதேவேளை பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத்தினர் வன்னியில் பாதுகாப்பான வீடுகளில் அவ்வப்போது வசித்து வந்துள்ளனர்.

அத்துடன் யுத்தம் காரணமாக இலங்கையில் இருந்து வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளவர்கள் வீடுகள் மற்றும் காணி கணக்கெடுப்பில் சேர்க்கப்படமாட்டாது எனவும் குணவர்தன கூறியுள்ளார்.

போர் காரணமாக இலங்கையில் வடக்கில் இருந்து 10 முதல் 11 இலட்சம் பேர் வெளியேறி வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் வீடுகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வந்ததுடன் பின்னர் இராணுவத்தினர் அவற்றை கைப்பற்றி பயன்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பிரான்ஸ் பிரஜை நாடு கடத்தப்பட்டார்

பாரியளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பிரான்ஸ் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

கொகெய்ன் ரக போதைப் பொருட்களே இவரூடாகக் கடத்தப்பட்டுள்ளது. குறித்த நபர் பாரியளவில் கொகெய்ன் போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்தியுள்ளார்.

இதன்பிரகாரம் சில்வான் லுபிலீஸ் என்ற பிரான்ஸ் நாட்டுப் பிரஜை உள்ளிட்ட நான்கு பேரை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசித்து குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை கைது செய்யும் விசேட நடவடிக்கை ஒன்றை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. (அ-2)

## பற்றரியின் ஊடாக தங்கம் கடத்தியவர் கைது


கையடக்க தொலைபேசி பற்றரியின் ஊடாக தங்கம் கடத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை இலத்திரனியல் சாதன வர்த்தக நிலையமொன்றின உரிமையாளர் ஒருவரே இவ்வாறு தங்கத்தை கடத்த முயற்சித்துள்ளார்.

இதன்போது 100 கிராம் எடையுடைய தங்கம் கடத்தப்பட்டுள்ளது. இந்தத் தங்கத்தின் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட தங்கம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாகவும், தங்கம் கடத்தியதற்கு அபராதமாக 50ஆயிரம் ரூபா விதிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சென்னைக்கு இந்த தங்கம் கடத்தப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



பருத்தித்துறை கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்ட போது... (படம்:- தும்பளைச் செய்தியாளர்)

## மனிதனுக்கு சுதந்திரம் என்பது மனமாற்றத்தினூடாகவே கிடைக்கும்

### வத்திக்கான் தூதுவர் பேராயர் யோசப்

(யாழ்ப்பாணம்)

மனிதனுக்கு சுதந்திரம் என்பது மனமாற்றத்தின் ஊடாக மட்டுமே பூரணமாக கிடைக்கக் கூடும் என இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு பேராயர் யோசப் ஸ்பிற்றறி யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருமறைக்கலா மன்றத்தின் கலைத்தூது கலாமுற்ற (ஓவியக் கூடம்) திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இல.15, றக்கா வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கலைத்தூது கலாமுற்றத்தை நாடாவெட்டி திறந்து வைத்தபின்பு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலை என்பது எல்லை கடந்தது. எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியது. அது மட்டுமின்றி காலங் கடந்தும் நிலைத்திருக்கக் கூடியது. யாழ்ப்பாணத்தின் கலை, கலாசாரம், பாரம்பரியம், வரலாறு என்பனவற்றை வெளியில் கொண்டு வருவதற்கு கலாமன்ற கலை முற்றம் உதவியிருக்கிறது.

இந்தக் கலைக்கூடம் இன்னும் பல பணிகளை சமூகத்திற்கு செய்யும் என்ற நம்பிக்கையுள்ளது. இன்னும் பல கனவுகள் இந்த கலைக்கூடத்தின் ஊடாக நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. இங்குள்ள கலைகள் வாழ்க்கையின் யதார்த்தத்தை பிரதிபலிக்கின்றன.

மேலும் மனிதனுக்கு சுதந்திரம் என்பது மனமாற்றத்தின் ஊடாக மட்டுமே பூரணமாக கிடைக்கக் கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பலவீனமாகவேயுள்ளன

### ஐ.தே.க. தெரிவிப்பு

இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் பலவீனமாக உள்ளது. அதைப் பலப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயசூரிய கூறியுள்ளார்.

அக்மீமன பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளமையானது முழு சமூகத்தையும் பாதிப்படைய செய்துள்ளது. குற்றவாளிகள் பணத்தை கொண்டு வாழ்கின்றனர். அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர்.

17ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அழுத்தம் கொடுத்து வருகிறது.

அரசியல்வாதிகள் கட்சி அரசியலை பின்தள்ளி வைத்து விட்டு நாட்டுக்கு எது சரியோ அதனை செய்ய வேண்டும் என்றார்.


அதே நிகழ்வில் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி உரையாற்றுகையில், சட்டமானது முன்னரை விட தற்பொழுது வலுவாக செயற்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு காலத்தில் அரசியல்வாதிகள் பொலிசாரை இயக்கி வந்ததுடன் தமக்கு சாதமாக இல்லாத அதிகாரிகளை இடமாற்றம் செய்து வந்தனர்.

எனினும் அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக இன்று நிலைமைகள் மாறிவிட்டதாக குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து பிரதமர் அலுவலகம் போராட்டக்காரர்களால் முற்றுகை





(பாங்கொக்)

**தாய்லாந்து நாட்டின் ஆட்சிக்கு எதிராக வெடித்த மக்கள் புரட்சி வன்முறையாக மாறியது. தாய்லாந்து அரசிற்கு எதிராக போராடி வரும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அரச ஆதரவாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

தாய்லாந்து முன்னாள் பிரதமர், தக்சின் ஷினவத்ரா. பதவி விலகக் கோரி ஒரு வாரமாக தலைநகர் பாங்கொக்கில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, கடந்த வாரம், எதிர்க்கட்சியினர் பாங்கொக்கில் உள்ள நிதி அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அங்கிருந்த ஊழியர்களை வெளியேற்றினர்.ஏனைய அமைச்சகங்களையும், கைப்பற்றி அரசு இயந்திரத்தை ஸ்தம்பிக்க செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இதையடுத்து, தலைநகர் பாங்கொக் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் பிரதமர் யிங்லக் அவசர நிலை அறிவித்துள்ளார். இந்நிலையில், அந்நாட்டு பாராளுமன்றத்தில், பிரதமர் யிங்லக் மீது எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தனர்.

இந்த தீர்மானம் தோற்றதால் யிங்லக்கின் பிரதமர் பதவி உயிர் பிழைத்தது.இரண்டு நாட்களுக்கு முன்னர் எதிர்க்கட்சியினர், பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நுழைந்து, மின் இணைப்பை துண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ரம்காம்ஹேங் என்ற பல்கலைகழக வளாகத்தினுள் அரசு ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் 2 ஆயிரம் மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் சிக்கி கொண்டனர். பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தி, மாணவர்களை வெளியேற்றினர்.

இந்த வன்முறையில், அரசு ஆதரவாளர் ஒருவர் உட்பட, ஐந்து பேர் உயிரிழந்தனர் 40இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து ள்ளனர்.


இது வரையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 10 அரசு அலுவலகங்கள், 6 தொலைக்காட்சி நிலையங்கள் ஆகியவற்றை முற்றுகையிட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தலைமை வகிக்கும் சுதீப் தாக்சுபன், பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் யிங்லக் ஷினவத்ராவின் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இதனால் பாதுகாப்பு கருதி பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் அலுவலக வளாகத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு அலுவலகங்களை மீட்பதற்காக புாதுகாப்புப் படையினர் அனுப்பப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸ் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (2)



அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மியான்மார் எதிர்க்கட்சி தலைவர் ஆங் சான் சூகி ஐ.நாவின் எயிட்ஸ் கட்டுப்பாட்டு அதிகாரி மிக்கேல் சி.டி.பியை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# ஆடைத்தொழிற்சாலையில் தீ; 7 பேர் உடல் கருகி பரிதாப மரணம்!



இத்தாலியில் ஆடைத்தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 பேர் தீயில் கருகி பலியாகினர். 3 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.இது தொடர்பாக தெரியவருவதாவது,

இத்தாலி மக்ரோலோட்டோவில் உள்ள பிராட்டோ எனும் நகரத்தில் ஒரு சீன. நாட்டவருக்குச் சொந்தமான ஆடைத் தொழிற்சாலை இயங்கி வருகின்றது. அங்கு பணி புரியும் தொழிலாளர்களில் பலர் தொழிற்சாலையின் மேல்பகுதியில் மர அட்டைத் தடுப்புகளால் ஏற்படுத்தப்பட்டிருந்த அறைகளில் தங்கியிருந்தனர்.

திடீரென தீவிபத்து ஏற்பட்டு தொழிற்சாலை எரிந்து சாம்பலானது. அத்துடன் மேலே தங்கியிருந்த தொழிலாளர்களும் வெளியே தப்பிக்க முடியாமல் புகையிலும், தீயிலும் சிக்கி இறந்துள்ளனர். இவர்களில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதாகவும், மூன்று பேர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விபத்தானது தொழிற்சாலைகள் நிறைந்துள்ள இந்தப் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளன.

இத்தாலியின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் இயங்கிவரும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் முறையான அனுமதியின்றி இங்கு பணிபுரிந்து வருவதாக டஸ்கனி பகுதியின் தலைவரான ஏன்ரிகோ ரோசி தெரிவித்தார்.

ஏனெனில் இங்கு தங்கி பணிபுரியும் பெரும்பான்மையானோர் எந்தவித பாதுகாப்புமின்றி கிட்டத்தட்ட அடிமைகள் போலவே காலம் தள்ளுவது அனைவரும் அறிந்த ஒன்றாகும் என்று இந்தப் பகுதியின் தொழிற்சங்க யூனியனின் பொதுச் செயலாளா குறிப்பிட்டுள்ளார். (2)




# கறுப்புப் பணம் முதலீடு செய்வதை தடுக்க வங்கிகள் கண்காணிப்பு




சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் முதலீடு செய்யப்படுவதைத் தடுக்க, கண்காணிப்பை தீவிரப்படுத்த அந்நாட்டு வங்கிகள் முடிவு செய்துள்ளன.

இதுகுறித்து, சுவிஸ் வங்கி உரிமையாளர்கள் சங்கம், தமது உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்ற வகையில், அனைத்து வெளிநாடுகளிலிருந்தும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து செய்யப்படும் முதலீடுகள் கறுப்புப் பணம் அல்ல என்பதை சுவிஸ் வங்கிகள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், சுவிட்சர்லாந்தின் ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு பணத்தை மாற்றினால்கூட அது கறுப்புப் பணமா என்பதைக் கண்காணிக்கவேண்டும்.

குறிப்பிட்ட முதலீட்டாளர் நெறிமுறைகளைப் பின்பற்றத் தவறிவிட்டால், அவருடனான உறவைத் தொடர்வதைப் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என சுவிஸ் வங்கி உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பொதுவாக, சுவிஸ் வங்கிகளில் முதலீடு செய்பவர்களைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாப்பது அந்நாட்டு வங்கிகளின் வழக்கம்.

ஆனால், சமீபத்தில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஓ.ஈ.சி.டி) உடன் முதலீட்டாளர்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தில் சுவிஸ் வங்கி உரிமையாளர்கள் சங்கம் கையெழுத்திட்டது.

அதன் தொடர்ச்சியாகத்தான், கறுப்புப் பணத்தின் வரத்தை தீவிரமாகக் கண்காணிக்க சுவிஸ் வங்கிகள் முடிவு செய்துள்ளன. (2)

# மெட்ரோ புகையிரதம் தடம்புரண்டது; நான்கு பேர் உயிரிழப்பு, 67 பேர் காயம்!



அமெரிக்காவில் மெட்ரோ புகையிரதம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில், 4 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 67 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச்சம்பவம் அமெரிக்காவின் நியூயோர்க் நகர் அருகேயுள்ள பிரா ங்க்ஸ் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரிய வருவதாவது, பிராங்க்ஸ் பகுதியில் உள்ள வளைவில் அந்த புகையிரதம் திரும்பிய போது திடீரென தடம்புரண்டு விபத் துக்குள்ளானது. இதில் அந்த புகையிரத்தின் 8 பெட்டிகளில் 6 பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு உருண்டன. குறிப்பாக ஒரு புகையிரதப் பெட்டி, அப்பகு தியில் ஓடிக் கொண்டிருக்கும் ஹார்லம் நதிக்குள் விழுவது போன்று தொங்கியது. விபத்து பற்றிய தகவலின்பேரில் தீயணைப்புப் படையினர் 100 பேர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விபத்தை தொடர்ந்து அப்பகுதியில் தாற்காலிகமாக புகையிரத சேவைக்கு தடை விதிக்கப்பட்டது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்துபோன ஆத்மாக்களை மதிப்பது உலகப் பொதுவிதி

## பல்கலை.மூடப்பட்டமைக்கு மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**இறந்து போன ஆத்மாக்கள் மதிக்கப் படுவது உலகப் பொது விதியாகும். அதே நேரம் தன் இனம் சார்ந்த யாருக்காவது அஞ்சலி செய்வது அந்த இனத்தின் அடிப் படை உரிமையாகும்.**

இந்த உரிமையை மறுப்பதை விட கேவலமான அநாகரிகச் செயல் இவ்வுலகில் வேறேதுமில்லை என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களை விட மேலதிகமான கால எல்லையில் மூடப் பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றையதினம் பல்கலை. மாணவர்களினால் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந் தது.

இவ் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்மிடமிருந்து பறிக்க முடியாதது பகுத்தறிவு மட்டுமல்ல பட்டறிந்த உணர்வுகளும் தான் என தலைப் பிடப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டிற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உட்பட நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் கடந்த மாதம் 9 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப் பட்டிருந்தது.

ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டும் டிசெம்பர் இரண்டாம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் எனப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது.

ஏனைய பல்கலைக்கழகங்கள் யாவும் ஒருவார விடுமுறையைத் தொடர்ந்து வழமைக்குத் திரும்பியிருந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் நீண்ட விடுமுறை எதற்காக?

மாணவர்களது பரீட்சை நெருங்குவதால் உரிய வகையில் தம்மைத் தயார்ப்படுத்துவதற்காகவே இந்த விடுமுறை வழங்கப்படுகின்றது. அத்துடன்பல்கலைக்கழகத்தில்காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதாகப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது.

உண்மையில் பரீட்சை விடுமுறை என்பது ஒரு அரையாண்டுப் பருவத்திற்குரிய அனைத்துப் பாடவிதானங்களும் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட சில நாட்களே விடப்படுவதுவழமையாகும். ஆனால், எந்தவொரு பாடவிதானத்தினதும் அரைவாசிப் பகுதிகளே நிறைவுறாத நிலையில் நீண்ட விடுமுறையை அமுலாக்கிவிட்டு பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் என்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்றோம் என்றும் சொல்வது மிகவும் ஏமாற்று நடவடிக்கையாகவும் கோமாளிக் கூத்தாகவுமே நாம் இதைப் பார்க்கின்றோம்.

மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருப்பதும் பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரவேசிப்பதும் அவர்களது சுயவிருப்பத்தினைப் பொறுத்தது எனக் கூறினாலும் நவம்பர் 9 ஆம் திகதியில் இருந்தே விடுதிகள் அடித்து மூடப்பட்டு விட்டன.

விடுமுறைக் காலத்தில் பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரவேசிப்பவர்கள் பயங்கரவாதிகளாகவே பார்க்கப்படுவர் என மறைமுக அச்சுறுத்தல்களையே மேற்கொண்டு வந்துள்ளனர்.

பரீட்சை தயார்ப்படுத்தலுக்காகவே இந்த விடுமுறை என்று கூறிவிட்டு மாணவர் விடுதிகளும் இழுத்து மூடப்பட்டமை உட்பட பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் மேற்கொள்வதுதான் பரீட்சைக்கான உண்மையான தயார்ப்படுத்தலா?

உண்மையில் இந்த விடுமுறையென்பது எதற்காக என்பது அனைவரும் அறிந்த விடயம். சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் திராணியற்று கடந்த மாவீரர் நாளையொட்டிய தினங்களில் பல்கலைக்கழகச் சூழல் முழுவதையும் ஒரு யுத்த சூனிய பிரதேசத்தை ஆக்கிரமித்திருப்பது போல் ஆயுதம் ஏந்திய கையினராய் இராணுவத்தினரும் பொலிஸாரும் சுற்றி வைளத்திருந்தனர்.

ஒரு கல்விச்சாலையையே கறைபடிந்த கண்களோடு ஆயுதப்படைகள் சுற்றிவளைத்திருப்பது உலகத்தில் இதுவாகத்தான் இருக்க முடியும்.


இந்த நீண்ட விடுமுறையானது ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் விடப்பட்டிருந்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாயிருந்திருக்கும். ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்ட விடயமானது எம்மை அவமானத்திற்கும் அடக்குமு றைக்கும் உள்ளாக்கும் செயலாகவே எம்மால் இதைப் பார்க்க முடியும்.

ஆகவே எவ்வழியிலும் ஏற்றுக் கொள்ள முடியாத இச்செயலுக்கு எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உடல் வேகும் உயிர் சாகும். எம்.உணர்வுகள் என்றும் வாழும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# வடக்கில் 4 வருட காலத்திற்குள் 8,411 பேருக்கு நியமனங்கள்







(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு கடந்த நான்கு வருடத்தில் மட்டும் வடக்கு மாகாணத்தில் 8 ஆயிரத்து 411 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்ட தரவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா தாரிகளுக்கு யாழ்ப்பாணம் கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் வைத்து நேற்றுக் காலை நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்று முடிந்த பின்னர் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா தாரிகளுக்கு நியமனம் வழங்கும் முதலாவது நிகழ்வாக இந்நிகழ்வுள்ளது.

219 முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 107 பேருக்கும் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 20 பேருக்கும் ஆசிரியர்கள் 25 பேருக்கும் இன்று (நேற்று) நியமனக் கடிதங்கள் வழங்கப்படுகின்றன.

இதில் யாழ்.மாவட்டத்தில் 136 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 10 பேரும் முல்லைத்தீவில் 30 பேரும் வவுனியா மாவட்டத்திலிருந்து 5 பேரும் மன்னார் மாவட்டத்திலிருந்து 38 பேருமாக மொத்தம் 219 பேர் முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் பெறுகின்றனர்.

அதேவேளை கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்பு வடக்கில் 8 ஆயிரத்து 411 பேருக்கு இன்று வரை நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் நடைமுறைகளுக்கு அமைவாக முகாமைத்துவ சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, நியமனங்கள் பெற்ற எல்லோரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றியுடையவர்களாயிருக்க வேண்டும். இவ்வாறான அமைதியான சூழல் ஏற்படுத்தப்பட்டு கல்வி நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டு முழுமையான, சந்தோசமான சுழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடத்திற்கு முன்பு இருந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைக்கும் வடக்கில் பாரிய வித்தியாசங்கள் உண்டு. அந்தக் காலப் பகுதியில் இங்குள்ள பலரும் பாதிக்கப்பட்டிருந்திருப்பீர்கள். ஆனால், தற்போது அந்த நிலை முற்றாக மாற்றப்பட்டு மீள்குடியேற்றம் முழுமையான கட்டுமானப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சுகாதாரத்துறையில் பல்வேறு விதமான பிரச்சினைகளைச் சந்தித்திருந்தோம். வைத்தியர்கள், மருத்துவ உதவியாளர்கள், தாதியர்கள் போன்றோரின் சேவை எமக்கு அதிகமாக தேவைப் பட்டிருந்தது.

இதேபோன்று, ஏனைய பல துறைகளிலும் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் கடந்த நான்கு ஆண்டு காலப் பகுதியில் முழுமையான, இயல்பான வாழ்க்கைக்கு இப் பகுதி மக்கள் மீண்டு வருவதற்கான சூழலை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

மேலும் எந்தவித பாகுபாடும் இன்றி இந்த நியமனங்களை வழங்கியுள்ளோம். எனவே, உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனங்களுக்கு ஏற்றவாறு திணைக்களங்களுக்குச் சென்று அரசியல் தலைமைத்துவத்தின் ஊடாகவும் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்றவாறும் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் மற்றும் வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்கால இழப்பீட்டு பதிவுகள் எவையும் உண்மைகளை வெளிக்கொண்டு வராது

## ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

(குருமன்காடு)

**இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் போர்க்கால இழப்பீடுகள் தொடர்பான புதிவுகள் உண்மையான தகவல்களை வெளிக் கொண்டு வராது. இது அரசின் ஏமாற்றும் செயற்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா கல்நாட்டியகுளம் முத்தமிழ் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கல்நாட்டிய குளத்தில் பொழுது போக்கு மையத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் சர்வதேச ரீதியில் இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்காகவும் தமிழ் மக்களையும சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுவதற்காகவும யுத்த கால இழப்பீடுகள் தொடர்பான பதிவுகளை இந்த அரசாங்கம் அவசர அவசரமாக மேற்கொண்டுள்ளது.

கடந்த கால யுத்தங்களில் பல குடும்பங்கள முழுமையாக கொலை செய்யப்பட்டுள்ளன. அவர்களின் பதிவுகள் இதில் உள்வாங்கப்படவில்லை. அதாவது யுத்தத்தில் இழப்பீடுகளை சந்தித்தவர்கள் தொடர்பான தகவல்கள் வழங்கும் போது குடும்ப உறுப்பினர் ஒருவரே வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தனது பெற்றோர்களையும் சகோதரர்களையும் இழந்த ஒருவர் தற்போது திருமணமாகி இருந்தால் அவர் தனது பெற்றோர் தொடர்பாகவோ அல்லது சகோதரர்கள் தொடர்பாகவோ பதிகளை மேற்கொள்ள முடியாது எனவும் அவ்வாறான ஒருவர் திருமணமாகிய குடும்பம் தொடர்பாக மட்டுமே பதிவு செய்ய வேண்டும் எனக் கூறியிருப்பதும் யுத்தப் பாதிப்புக்கள் தொடர்பாக எவ்வாறு முழுமையான தகவல்களை பெறமுடியும் என்ற சந்தேகத்தையும், யுத்த இழப்பீடுகளை அரசு மறைக்க முயல்வதையும் சுட்டிக் காட்டுகிறது.

இதைவிட, எமது நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக எமது உறவுகள் பல இடம்பெயர்ந்து இந்தியாவிலும் புலம் பெயர் நாடுகளிலும் வசித்து வரும் நிலையில் அவர்களது பாதிப்புக்கள் தொடர்பான தகவல்கள் உள்வாங்கப்படுவதற்கு எந்தவொரு வழிமுறைகளும் ஏற்படுத்தப்படவில்லை.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த பல மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற்றப்படவில்லை. இராணுவத்தினரால் மக்களுடைய நிலங்கள அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் பல குடும்பங்கள் பிற மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் முறையாக யுத்த இழப்பீடுகளை பதிவு செய்வது தொடர்பிலும் சரியான முறை எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை.

யுத்த இழப்பீடுகள் தொடர்பாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டியது அவசியமானது தான். ஆனால் அது நேர்மையாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். அதை விடுத்து சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கான வெறும் கண்துடைப்பாக அமையக் கூடாது எனவும் தெரிவித்தார்.



வவுனியா சிறிநாகராஜா வித்தியாலய உப அதிபர் எஸ்.தயானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினரான ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.பார்த்தீபன், வவுனியா சிறி நாகராஜ வித்தியாலய அதிபர் வரதராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-250)

# நடமாடும் சேவை மூலம் சேவையை பெற வழிசெய்க

## முழங்காவில் தபாலகத்திடம் மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் கரியாலை நாகபடுவான் கிராம அலுவலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணம், நோய் உதவிக் கொடுப்பனவுகள் 70 வயதை அடைந்தோருக்கான 1000 ரூபா கொடுப்பனவு போன்றவற்றைப் பெறுபவர்கள் தமது கொடுப்பனவைப் பெறுவதற்காக 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள முழங்காவில் தபாலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

இவர்கள் தமது கொடுப்பனவை மாதத்தில ஒரு நாள் முழங்காவில் தபாலகத்தின் மூலம் நடமாடும் சேவையாக தமக்கு வழங்கி உதவ வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

தபாலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக சமூக சேவை அதிகாரி ஆகியோருடன் இணைந்து இச் சேவையை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் மூலம் தமது பிரயாணக் கஷடங்களைக் குறைக்க முடியுமெனவும் கூறுகின்றனர்.

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் பிரமந்தனாறு கிராம மக்களுக்கு இவ்வாறாக கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலும் மலையாளபுரம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், விவேகானந்தநகர் ஆகிய கிராம மக்களுக்கும தபாலதிபரின் மூலமாக கொடுப்பனவுகளை நடமாடும் சேவையின் மூலம் விரைவில் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதுபோல கரியாலைநாகபடுவான் கிராம மக்களும் தமக்கும் தபாலகத்தின் மூலமான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-254)




# கழிவுப்பொருட்கள் போடப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை



(குருமன்காடு)

வவுனியா வைரவ புளியங்குளம் ஆதி விநாயகர் குளக்கட்டு வீதியில் வீடு,கடைகளின் கழிவு பொருட்கள் கொட்டப்படுவதனால் வீதியால் பயணம் செய்ய முடியாதுள்ளது. இவ்வாறு கழிவு பொருட்கள் போடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

சமூக ஆர்வலர்கள் சிலரின் முயற்சியினால் குளக்கட்டு வீதி அகலப்படுத்தப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வாறான கழிவு பொருட்களை கொட்டுவதனால் வீதி பழுதடைவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குளங்களில் கழிவு பொருட்கள் கொட்டப்படுவதனால் குளநீர் மாசுபடுகின்றது. கழிவு பொருட்கள் மட்டுமன்றி பழைய மரங்களும் குளத்தில் கொட்டப்படுகின்றன. இதனால் குளநீர் மாசடைவதோடு நுளம்புகள் பெருகக்கூடிய இடமாகவும் காணப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் குளத்தி லும் குளவீதியிலும் கழிவு பொருட்கள் கொட்டப்படுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு; பணம், பொருட்கள் கொள்ளை

(மல்லாவி)

மாங்குளம் நகரப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு பணம், பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதுஇ ஏ-9 வீதியில் உள்ள மாங்குளம் நகரத்தில் பிரியந்தன் என்ற பல்பொருள் விற்பனை உரிமையாளர் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வீடு சென்றுள்ளார்.

அவர் மறுநாள் வர்த்தக நிலையத்துக்கு வந்த போது வர்த்தக நிலையத்தின் பின்கதவு உடைக்கப்பட்டு பணம், பொருட்கள் என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் தெரிய வந்தது. இதனையடுத்து வர்த்தக நிலைய உரிமையாளர் மாங்குளம் பொலிசாருக்கு முறையிட்டதை அடுத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-15)

# மின்சாரம் தடைப்படும்

(கிளிநொச்சி)

பாலிநகர், வவுனிக்குளம், கொல்லவிளான்குளம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், செல்வபுரம் ஆகிய இடங்களுக்கு பராமரிப்பு வேலை காரணமாக இன்றும் நாளையும் நாளை மறுதின மும் 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்படும் என மாங்குளம் மின்சார சபையினர் அறிவித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத்தால் நஞ்சு இறங்குகிறது. இறைவனது நாமத்தால் நாம் செய்த பாவங்கள் இறங்கி விடும்.
~ ஸ்ரீ சத்யசாயி பகவான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புலிகளுக்கு உதவிய மதகுருவை கைது செய்ய உதவ வேண்டும்

## சுப்பிரமணியன் சுவாமி வேண்டுகோள்

(சென்னை)

தமிழ்நாட்டில் செயற்படும் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளரான ஒரு றோமன் கத்தோலிக்க மதகுருவை கைது செய்வதற்கான ஆதாரங்களை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பொலிஸாருக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட றோமன் கத்தோலிக்க மதகுருவை ஒரு குற்றவாளியாக அமெரிக்காவின் எப்.பி.ஐ. புலனாய்வுப் பிரிவு இனங்கண்டிருக்கிறதென்றும் இவர் அமெரிக்காவில் பயங்கரவாதம் தொடர்பான செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்றும் குற்றம்சாட்டப்பட்டுள்ளதாக சுப்பிரமணியன் சுவாமி மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் இம் மதகுரு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் புலனாய்வாளர் ஒருவருக்கு இலஞ்சம் கொடுத்து விடுதலைப் புலிகளுக்கு அவர் மூலம் உதவியைப் பெற்றுக் கொடுக்க எத்தனித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதையடுத்து சம்பந்தப்பட்ட மதகுருவை கைது செய்வதற்கான பிடியாணையை அமெரிக்க நீதிமன்றம் ஒன்று பிறப்பித்திருப்பதனால் எப்.பி.ஐ. புலனாய்வாளர்கள் உலகெங்கிலும் தேடிக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கும் அவர் இந்தியாவின் என்.டி.டி.வி.மற்றும் சி.என்.என்.ஐ.பி.என் தொலைக்காட்சிகளில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலும் பங்குபற்றியிருப்பதாகவும் சுப்பிரமணியன் சுவாமி மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# வலி.வடக்கு மக்கள் தொகை புள்ளிவிபரத்தில் குறைப்பு!

## மீள்குடியேற்றத் தலைவர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஐ.நாவுக்கான இடம்பெயர்ந்த மக்களின் மனிதவுரிமைக்கான சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானியிடம் வலி.வடக்கு மக்கள் தொடர்பிலான புள்ளி விபரங்களினை குறைத்துக் காட்டுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக் குழுத் தலைவர் எஸ்.சஜீவன் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனிடமும் இவ்வாறான எண்ணிக்கை குறைக்கப்பட்ட தகவல்களே வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலி.வடக்கிலிருந்து 1990-ல் இடம்பெயர்ந்து பல பிரதேச செயலக பிரிவுகளில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். கடந்த 23 வருடங்களில் அரசாங்க அதிபர் பிரதேச செயலகம் ஊடாக கிராம சேவையாளர்களினால் வலி.வடக்கில் மீள்குடியேற்ற வேண்டிய மக்களின் விபரங்கள் பல முறை எடுக்கப்பட்டிருந்தது.

மேற்படி எடுக்கப்பட்ட தகவல்களின்படி 7 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறுவதற்காக பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். இம்மக்கள் தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய், நல்லூர், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேசத்திற்கு உட்பட்ட முகாம்களிலும் தனியார் வீடுகளிலும் பிற இடங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

அண்மையில் பிரித்தானிய பிரதமரின் வருகையின் போது அவருக்கு தெரியப்படுத்துவதற்காக அரசாங்க அதிபரால் மீள்குடியேற்றப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காக குறைக்கப்பட்டு 5 ஆயிரத்து 818 ஆக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 4 மாதங்களுக்கு முன்பு முகாம்களில் உள்ள மக்களின் இடம் பெயர்ந்தோருக்கான குடும்ப அட்டையை நிரந்தர அட்டையாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளை எம்மால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்றுவரும் ஐ.நாவுக்கான இடம் பெயர்ந்த மக்களின மனித உரிமைக்கான பிரதிநிதிக்கும் இவ்வாறான தவறான விபரங்களை காட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது.

வலி.வடக்கு மக்களின் வாழ்வுரிமையில் அடிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்ககளை கேட்டுக் கொள்வதோடு இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# திறந்த பொருளாதாரத்தால் வடக்கின் விவசாயம் பாதிப்பு

## ரிக்கிரி கொப்பேகடுவ தெரிவிப்பு

(கொழும்பு)

போர் ஏற்படுவதற்கு திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஓர் முக்கிய காரணி என மத்திய மாகாண ஆளுனர் ரிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

திறந்த பொருளாதாரம் காரணமாக வடக்கின் விவசாயம் வீழ்ச்சியடைந்தது. 1982-ம் ஆண்டில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட எனது சிறிய தந்தை ஹெக்டர் கொப்பேகடுவவிற்கு வடக்கு மக்கள் ஆதரவளித்தனர்.

தேர்தல் பிரசாரத்திற்காக சென்றிருந்த போது மரக்கறி வகைகளினால் மாலை செய்து அணிவித்தனர். அந்தக காலப்பகுதியில் வடக்கு மக்கள் விவசாயத்தில் தன்னிறைவு நிலைமையை எட்டியிருந்தனர். திறந்த பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகம் செய்ததன் பின்னர் வடக்கு மக்களின் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலைமை நாட்டில் பயங்கரவாதம் ஏற்படுவதற்குக் கூட காரணமாக அமைந்தது. அந்த இருண்ட யுகம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சமாதானத்தை உரிய முறையில் பயன்படுத்தி வடக்கின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமென ரிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார். (எ-11)

# அந்தோனியார் சுருவ திறப்புவிழா

(மானிப்பாய்)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அந்தோனியார் சுருவத்தின் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும்.

திருப்பலி பூஜைகளுக்குப் பின்பாக 5.30 மணியளவில் இந்த புதிய சுருவம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சுருவத்தினை யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் திறந்து வைக்கவுள்ளார். (அ-9-23)

# திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் இந்து ஆலயங்களை காப்பாற்ற வாருங்கள்

சிவபூமி என்று போற்றப்பட்ட சிறப்பு ஈழ மண்ணுக்கு உண்டு. எந் நாட்டவர்க்கும் இறைவனான சிவன் தென்னாட்டில் இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் திருமந்திரம் எனும் உன்னத திருமுறையை தந்த திருமூலர் ஈழ மண்ணை சிவபூமி என்று அழைத்தார்.

சிவபூமி என்று நம் மண்ணை திருமூலர் அழைத்தார் என்னும் போது, எங்கள் மண்ணில் சிவ வழிபாடும் சிவாலய சிறப்புக்களும் சைவசமய கலாசாரங்களும் எத்துணை தூரம் உயர்வு பெற்றிருந்தன என்பதை நாம் இலகுவாக கணிப்பீடு செய்ய முடியும்.

தென்னாடுடைய சிவன் உறைகின்ற தமிழகத்து உறவுகள் உரையாடலின் போது 'ஆம்' என்றே கூறிக் கொள்ள, ஈழத்தமிழர்கள் 'ஓம்' என்றுக் கூறிக்கொள்வர்.

வேத மந்திரங்கள் அத்தனைக்கும் மகுடமாக இருப்பது ஓம் என்ற உச்சரிப்பாகும். இந்த உலகப் பிரபஞ்சத்தின் இயங்கு நிலையின் ஓசை ஓம் என்ற ஒலிப்பையுடையது என்ற உண்மை இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு மனிதனின் இதயத்துடிப்பின் இயங்கு நிலைக்கு ஓம் என்ற உச்சாடனம் பெரும் மருந்தாக அமைந்துள்ளது என்ற உண்மைகளுக்கு மத்தியில் ஈழத்தமிழர்களாகிய நாம் எங்கள் அன்றாட வாழ்க்கையின் தொடர்பாடலில் ஓம் என்பதை உச்சரிக்கும் வழக்கத்தை கொண்டவர் என்று நினைக்கும் போது எங்கள் மண்ணை சிவபூமி என்று திருமூலர் அழைத்ததில் நிறைந்த அர்த்தம் உண்டு என்பதை நாம் உணர முடியும்.

இவ்வாறாக சிவபூமி என்று போற்றப்பட்ட எங்கள் மண்ணில் இன்று ஆலயங்கள் உடைக்கப்படுவதும் ஆலயங்களின் இருக்கக்கூடிய மிகப் பெறுமதி வாய்ந்த விக்கிரகங்கள் திருடப்படுவதுமான சம்பவங்கள் சைவ சமயத்தை இந்த மண்ணிலிருந்து வேரறுக்க சதித்திட்டங்கள் நடக்கின்றனவா என்று எண்ணாமல் இருக்க முடியாது.

மிக நீண்ட வரலாற்றுப் பெருமையும் சரித்திரமும் கொண்ட ஆலயங்களின் மூர்த்திகளை திருடுவதன் மூலம் ஒரு பெரும் வரலாற்றுச் சரித்திரம் அழித்தொழிக்கப்படுகின்றது.

கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு ஆலயங்களை புனரமைத்து திருக்குடமுழுக்கு நடத்தி வைக்க, ஒரு இரவுப் பொழுதில் அந்த ஆலயத்தில் இருக்கக் கூடிய தெய்வச் சிலைகள் களவாடப்படுகின்றன என்றால், அத்தகைய சம்பவங்கள் சைவ மக்களை எந்தளவு தூரம் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதை உணர்ந்து கொள்வதற்கு எங்கள் மண்ணில் எவரும் இல்லையென்றே கூறவேண்டும்.

ஆலயங்கள் என்பன நம்பிக்கைகள் என்ற மிகப் பலமான அத்திபாரங்களில் அமைக்கப்பட்டவை. ஒரு காலத்தில் கற்பூரம் அணைத்து சத்தியம் செய்து பிணக்குகளை தீர்க்கும் நீதிமன்றங்களாக இந்து ஆலயங்களே விளங்கின.

தெய்வக் குற்றம் என்பதற்காகப் பாவ பழிகளைச் செய்யப் பயந்த எங்கள் சைவப் பண்பாட்டிற்கு அடித்தளமாக இருந்த இந்து ஆலயங்கள் இன்று திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன.

எனவே, இதைத்தடுப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை. இதற்காக நாம் காத்திரமான-பயனுறுதிமிக்க விழிப்புணர்வை ஏற்படுத்துவது காலத்தின் அவசிய தேவையாகும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## மீண்டும் திரும்பி வரும்



❖ நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டுமே உலகமும் சிறப்புடையதாக இருக்கும்.

❖ அறியாமையுடன் வாழ்வதைக் காட்டிலும், போரில் ஈடுபடும் வீரனைப் போல போராடி மாய்வதே மேலானது.

❖ உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றுங்கள். நேர்மையின் பாதையில் செல்லுங்கள். கோழையாகவும், வேடதாரியாகவும் இருக்காதீர்கள்.

❖ கொடுக்கும் சக்தி உங்களிடம் உள்ள வரையில் கொடுங்கள். அது ஆயிரம் மடங்காகப் பெருகி உங்களிடமே மீண்டும் வரும்.

❖ எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள். உங்களுக்கு எது நல்லதென்று படுகிறதோ, அதை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

❖ தன்னை அடக்கிப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அத்தகையவனே உலகில் நன்றாக வாழத் தகுதி படைத்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லையில் சுவர் அமைப்பதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## ஹபீஸ் சயீத் கடும் எதிர்ப்பு

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் எல்லையருகே மதில் சுவர் அமைப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என ஜமாத் உட்தாவா தலைவர் ஹபீஸ் சயீத் கடும் எதிர்புத் தெரிவித்துள்ளார்.

'காஷ்மீர் அருகேயுள்ள இந்தியா - பாகிஸ்தான் எல்லைக்கோட்டின் அருகே அடிக்கடி நடமாடும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்திய இராணுவ வீரர்கள் மீது அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகின்றன.

மேலும், மழை மற்றும் பனிக்கால இரவுகளில் தீவிரவாத பயிற்சியில் கைதேர்ந்த சிலர் இந்திய எல்லைக்குள் ஊடுருவவும் முயல்கின்றனர். இவற்றை தடுத்து நிறுத்த இந்தியா - பாகிஸ்தான் இடையே உள்ள எல்லைக் கோட்டு பகுதியில் நீண்ட மதில் சுவர் கட்ட வேண்டும் என்று பாகிஸ்தான் அரசை இந்தியா கேட்டுக்கொண்டது.

இந்நிலையில், இந்த மதில் சுவரை கட்டுவதற்கு ஜமாத் உட்தாவா தலைவர் ஹபீஸ் சயீத் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.



அந்நாட்டில் உள்ள 30 முஸ்லிம் அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய ஹபீஸ் சயீத் உரையாற்றுகையில்,

"மேற்கு மற்றும் கிழக்கு பாகிஸ்தான் எல்லைகளை பிரதமர் நவாஸ் ஷரீப் பாதுகாக்க வேண்டும். காஷ்மீர் எல்லை அருகே மதில் சுவர் கட்டுவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டாம், இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு தழுவிய அளவில் உள்ள இஸ்லாமிய அமைப்புகளுடன் சேர்ந்து கூட்டு பிரசாரத்தில் ஈடுபடுவோம்.

விசா நிபந்தனை தளர்வு, இந்தியாவுடனான நட்புறவை புதுப்பித்தல் போன்ற எந்த புதிய முடிவுகளையும் பிரதமர் நவாஸ் ஷரீப் எடுக்க கூடாது. மீறினால் அவரது தலைமையிலான அரசு கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். (2)

# தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(இராமேஸ்வரம்)

தமிழகத்தைச் சேர்ந்த 30 மீனவர்களுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றம் நேற்றையதினம் இவ்வுத்தரவை நீடித்துள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள இராமேஸ்வரம், புதுக் கோட்டையைச் சேர்ந்த 30 மீனவர்கள் கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டனர்.

இவர்களது நீதிமன்றக் காவல் நேற்றுடன் நிறைவு பெறுவதை அடுத்து, அவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களது விளக்கமறியலை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(2)

# ஜப்பான் மன்னன் இந்தியா வருகை

(சென்னை)

ஜப்பான் மன்னர் அகிஹிடோ மற்றும் அவரது மனைவி ராணி மிசிகோ ஆறு நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளனர்

தனி விமானத்தில் டில்லி வந்த அவர்களை பிரதமர் மன்மோகன் சிங், அவரது மனைவி குர்சரண் கவுர் ஆகியோர் வரவேற்றனர்.

ஜப்பான் மன்னருடன், முன்னாள் பிரதமர் யோஷிரோ மோரி உட்பட 50 பிரதிநிதிகளும் இந்தியா வந்துள்ளனர். இந்த நிலையில், ஜப்பான் மன்னர் அகிஹிடோ, நாளைய தினம் 2 நாட்கள் பயணமாக சென்னை வருகிறார்.

சென்னை வரும் அவர், அன்றைய தினம் மாலை கலாசேத்ராவில் நடைபெறும் பரதநாட்டிய நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கிண்டி சிறுவர் பூங்காவுக்கு ஜப்பான் மன்னர் அகிஹிடோ செல்கிறார். பின்னர், அங்கிருந்து ஆளுநர் மாளிகைக்கு செல்வார்.

அதன் பின்னர், தரமணியில் உள்ள மனநலம் குன்றியோர் மையத்திற்கு ஜப்பான் மன்னர் செல்கிறார். பின்னர் அன்றிரவே தனி விமானத்தில் ஜப்பான் பயணிப்பார்கள்.

ஜப்பான் மன்னர் சென்னை வருகையையொட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

## மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை

பாரதச் செய்தி

(சென்னை)

**ஈழத்தமிழர்களுக்கு இலங்கை அதிகாரம் அளிக்கும் என்பதை உறுதிசெய்யும் பொறுப்பும் கடமையும் இந்தியாவிற்குள்ளது. ஆனால், இலங்கைப் பிரச்சினையில் தலையிட இந்தியாவிற்கு எந்த உரிமையும் இல்லை. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைப்பது குறித்து எவரும் பேசமுடியாது என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளரும்; அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார். அமைச்சரின் இந்தப் பேச்சு கடுமையாக கண்டிக்கத்தக்கதொன்றாகும் என பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சென்னையில் அண்மையில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றிய மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம், இலங்கையில் வடக்கு, கிழக்கு மாநிலங்களை இணைத்து தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் பெற்றுத் தரப்படும் என்று கூறியிருந்தார். சிதம்பரத்தின் இந்த கருத்துக்கு இலங்கை கண்டனம் தெரிவித்துள்ளது.

சிதம்பரத்தின் பேச்சு பற்றி தமிழோசைக்கு கருத்து தெரிவித்த இலங்கை ஆளும் கட்சியின் பொதுச் செயலாளரும், மூத்த அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, "இலங்கைப் பிரச்சினையில் தலையிட இந்தியாவுக்கு எந்த உரிமையும் இல்லை. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களை இணைப்பது குறித்து எவரும் பேச முடியாது" என்று கூறியிருக்கிறார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சமான வடக்கு - கிழக்கு மாநிலங்களின் இணைப்பு குறித்து கூட இந்தியா பேசக் கூடாது என்று கூறியிருப்பதன் மூலம் இலங்கையில் தமிழர்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் வழங்கப் படாது என்பதை இலங்கை அமைச்சர் தெளிவாக தெரிவித்திருக்கிறார்.



அதுமட்டுமின்றி, "இலங்கையில் அனைவரும் பயன்படுத்த கழிப்பறைகள் உள்ளன. இந்தியாவில் தான் கழிப்பறைகள் கூட இல்லை. முதலில் அந்தப் பிரச்சினையை அவர்கள் தீர்க்கட்டும்" என்றும் அவர் கடுமையாக விமர்சித்திருக்கிறார். இது இந்தியாவை அவமதிக்கும் செயலாகும்.

1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டின்படி இந்தியாவிடமிருந்து ஏராளமான உதவிகளை இலங்கை பெற்றிருக்கிறது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடு என்ற முறையில், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஈழத்தமிழர்களுக்கு இலங்கை அதிகாரம் அளிப்பதை உறுதி செய்யும் பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உள்ளது.

ஆனால், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடக் கூடாது என்ற இலங்கை அமைச்சரின் இந்த பேச்சு கடுமையாக கண்டிக்கத்தக்கதாகும்.

இந்தியாவை இலங்கை அவமதிப்பது காலம்காலமாகவே நடந்து வருகிறது. இந்திய - இலங்கை உடன்பாட்டின்படி ஈழத்தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு - கிழக்கு மாநிலங்கள் இணைக்கப்பட்டன.

ஆனால், இந்த இணைப்பை இலங்கை அரசு தன்னிச்சையாக இரத்து செய்தது. இது இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட முதல் அவமதிப்பாகும். 2009 ஆம் ஆண்டில் போர் முடிந்த பின்னர், ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று கூறியதற்காக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணாவையும், இந்திய அரசையும் இலங்கை பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தரக்குறைவாக விமர்சனம் செய்து அவமதித்தார். இதை எல்லாம் இந்திய அரசு கண்டும் காணாமலும் இருந்த நிலையில் இப்போது மீண்டும் ஒரு அவமரியாதை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அவமதிப்புகளுக்குப் பின்னரும் சர்வதேச அரங்குகளில் இலங்கையை ஆதரித்து, போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து காப்பாற்றப்போகிறதா? அல்லது இனியாவது இலங்கை தொடர்பான நிலையை மாற்றிக் கொண்டு அந்த நாட்டிற்கு பாடம்புகட்டப் போகிறதா? என்பது தான் மத்திய அரசிடம் தமிழக மக்கள் முன் வைக்கும் கேள்வி ஆகும்.

கடந்த 65 ஆண்டுகளில் இந்தியாவிடமிருந்து இலங்கை ஏராளமான உதவிகளைப் பெற்றுக் கொண்ட போதிலும் ஒருபோதும் நமக்கு விசுவாசமாக இருந்ததில்லை.


சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளால் இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் அந்த நாடுகளுக்குத் தான் இலங்கை ஆதரவாக இருந்தது. இனியும் இந்தியாவுக்கு இலங்கை ஆதரவாக இருக்காது. அதேநேரத்தில் தமிழீழம் அமைக்கப்பட்டால் அது இந்தியாவுக்கு அரணாக இருக்கும்.

இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்து இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையை மத்திய அரசு மாற்றியமைக்க வேண்டும்.

அதனடிப்படையில் இலங்கையில் நடந்த இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்துவதற்கும், தமிழீழம் அமைப்பது குறித்து உலகம் முழுவதும் வாழும் மக்களிடையே ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். என ராமதாஸ் கூறியுள்ளார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி ஒருநாள் தரவரிசை டாப்- 10 இல் தவான்



ஐ.சி.சி ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் முதன் முறையாக டாப்-10 வரிசையில் இடம்பிடித்துள்ளார் ஷிகர் தவான்.

ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்(ஐ.சி.சி) டுபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக் கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ஷிகர் தவான் 736 புள்ளிகளுடன் 11-வது இடத்தில் இருந்து 9-வது இடத்திற்கு முன்னேறி யுள்ளார்.

இதன்மூலம் முதன் முறையாக டாப்-10 பட்டியலில் இடம் பிடித்துள் ளார்.


முதல் மூன்று இடங்களை இந்தி யாவின் வீராட் ஹோலி (876 புள்ளி), தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் (859), அவுஸ்தி ரேலியா வின் ஜோர்ஜ் பெய்லி (835) ஆகியோர் தக்க வைத்துக் கொண்டனர்.

அடுத்து நடக்கவுள்ள இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத் தினால் ஹோலி முதலிடத்தை தக்கவைத்துக் கொள்ளலாம்.

ஒருவேளை டி வில்லியர்ஸ் சாதிக்கும் பட்சத்தில், முதலிடத் துக்கு முன்னேறலாம்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் பாகிஸ் தானின் சயீட் அஜ்மல், மேற்கிந் திய தீவுகள் அணியின் சுனில் நரைன், இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் நீடிக்கின்றனர்.

# தென்னாபிரிக்க தொடர் சவாலானது- தோனி



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான கிரிக்கெட் தொடரை வெற்றிகர மாக முடித்த தோனி தலைமையி லான இந்திய அணி அடுத்து தெனனாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து 3 ஒரு நாள் போட்டி மற்றும் இரண்டு டெஸ்டில் விளை யாடுகிறது. இந்தியா-தென்னா பிரிக்கா இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி வருகிற 5-ந்தேதி ஜோகனஸ்பர்க்கில் நடக்கிறது.

இதையொட்டி இந்திய அணி நேற்று முன்தினம் நள்ளிரவில் மும்பையில் இருந்து தென்னா பிரிக்காவுக்கு புறப்பட்டது. முன்ன தாக இந்திய தலைவர் டோனி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வுக்கு பிறகு இந்திய அணியின் முதல் பயணம் இதுவாகும். குறிப்பிட்ட வீரர் ஓய்வு பெறும் போது எப் போதுமே அது புதிய தொடக்க மாகத் தான் இருக்கும்.

நமது அணியில் உள்ள பெரும் பாலான வீரர்கள் டெஸ்டை விட ஒரு நாள் போட்டியில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி இருக் கிறார்கள். இந்த தொடர் எல்லா வீரர்களுக்கும் புதிய சவாலாகும். இங்கு பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமின்றி வெளிநாடு தொடர்கள் எப்போதுமே சவால் மிக்கவை. குறிப்பாக பந்து வீச்சாளர்கள் சரியான திசையில், எகிறும் (பவுன்ஸ்) ஆடுகளங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு நாள் போட்டியுடன் இந்த சுற்றுப்பயணத்தை தொடங்குவது நல்ல விஷயமாகும். பேட்ஸ் மேன்கள் இதில் சிறப்பாக விளை யாடி அதன் அனுபவத்தின் துணை யுடன் அடுத்து வரும் டெஸ்ட் தொடரை நம்பிக்கையுடன் எதிர் கொள்ள முடியும்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடக்க ஆட்டக்காரர்களாக முரளி விஜயும், ஷிகர் தவானும் அருமையாக விளையாடி வருகிறார்கள். எனவே இப்போதைக்கு எங்களது 3-வது தொடக்க ஆட்டக்காரர் பரிசீலனை யில்தான் கவுதம் கம்பீர் இருக்கி றார். ஆனால் அவர் அணியில் இடம் பெறவில்லை என்பதை அறிவேன்.

டெஸ்ட் அணியில் டெண்டுல் கர் ஆடிய 4-வது வரிசையில் யார் இறங்குவார் என்று கேட்கிறீர்கள். அது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால் அவரது இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது. ஒரு வேளை பேட்டிங் வரிசையில் 4-வது இடத்தை நீக்கிவிட சாத்தியக்கூறு இருந்தால், 1, 2, 3, 5, 6 என்று 12-வது வரை பேட்டிங் வரிசையை நீட்டிக்க முயற்சி செய்வோம்.

கடந்த சில ஆட்டங்களில் எங்களது பந்து வீச்சில் நிறைய முன்னேற்றம் அடைந்து உள் ளோம். ஆனால் மேலும் எப்படி முன்னேற்றம் காண்பது என்பதை பார்ப்போம். கடைசி 10 ஓவர்களில் அதிக ரன்களை விட்டுக்கொடுப் பதை கட்டுப்படுத்த முயற்சிப்போம். இது புதிய சீதோஷ்ண நிலை. இங்குள்ள ஆடுகளங்கள் வேகப் பந்து வீச்சுக்கு உகந்தவை. யோர்க்கராக வீசுவதுடன், பவுன்ஸ் தன்மையையும் பந்து வீச்சாளர் கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே பந்து வீச்சு எப்படி அமையும் என்பதை பொறுத்தி ருந்துதான் கவனிக்க வேண்டும்.

உலக தரவரிசையில் இரண்டு அணிகளும் நல்ல நிலையில் இருக்கிறது. ஒரு நாள் போட்டி தரவரிசையில் நாங்கள் "நம்பர் ஒன்" இடத்தில் உள்ளோம். டெஸ்ட் தரவரிசையில் தென்னாபிரிக்கா முதலிடத்தில் இருக்கிறது. எனவே இந்த தொடர் விறுவிறுப்பாகவும், சுவாரசியமாகவும் இருக்கப் போகிறது. ஆனால் இங்குள்ள சூழலுக்கு ஏற்ப வெகுவிரைவில் மாற்றிக் கொள்வதே முக்கியமான அம்சமாக இருக்கும்.

இவ்வாறு தோனி கூறினார்.

# சினிமாவில் ஆசிப்



சூதாட்டப் புகாரில் சிக்கி தவித்த பாகிஸ்தான் அணி யின் வீரர் மொஹமட் ஆசிப் சினிமாவில் நடிக்க உள்ளார்.

கடந்த 2010ம் ஆண்டு கிரிக்கெட் சூதாட்ட புகாரில் சிக்கிய பாகிஸ்தான் அணி யின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆசிப்புக்கு 5 ஆண்டுகள் தடை விதிக்கப் பட்டது.


கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கி இருக்கும் அவர், தனது புதிய இன்னிங்சை தொடங்க உள்ளார்.

அதாவது சினிமா படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

ஒன்ஸ்மோர் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்தை பொலிவுட் இயக்குநர் இக்ரம் அக்தர் இயக்குகிறார்.

புதிதாக எதையாவது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் சினிமா வாய்ப்பை ஏற்றுக் கொண்டுள்ளதாக மொஹமட் ஆசிப் தெரிவித்துள்ளார்.

# வீரர்கள் தேர்வு ஆலோசிக்கவில்லை அதிருப்தியில் மொஹமட் ஹபீஸ்



வீரர்களை தெரிவு செய்வது குறித்து தன்னிடம் யாரும் கலந்து ஆலோசிக்கவில்லை என அணித் தலைவர் முகமது ஹபீஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் (ஒரு போட்டி) மற்றும் இலங்கைக்கு (2 ஆட்டம்) எதிராக விளையாடும் பாகிஸ்தான் 20 ஓவர் கிரிக்கெட் அணி அறிவிக் கப்பட்டுள்ளது.

இந் நிலையில் வீரர்களை தெரிவு செய்வது குறித்து தன்னிடம் தெரிவு குழுவினர் கலந்து ஆலோ சிக்கவில்லை என அணித் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கூறுகையில், ஆப்கானிஸ் தான், இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டியில் விளையாடும் பாகிஸ்தான் அணியில் இடம் பெற்று இருக்கும் வீரர்கள் யார் என்று எனக்கு தெரியாது.

ஏனென்றால் நான் விமானத் தில் இருந்தேன், வீரர்களை தெரிவு செய்வது தொடர்பாக குழுவை சேர்ந்த யாரும் என்னி டம் கலந்து ஆலோசிக்கவில்லை.

அணியில் இடம் பெற்ற வீரர்கள் யார் யார் என்பது இனி தான் எனக்கு தெரியும் என்று தெரிவித்துள்ளார்.

அணி விவரம்

மொஹமட் ஹபீஸ் (அணித் தலைவர்), அகமது ஷேசாத், சர்ஜில்கான், சோயிப் மசூத், உமர் அமின், உமல் அஜ்மல், அப்ரிடி, சுல்பீகார் பாபர், பிலாவல், ஜூனைத்கான், சோகைல் தன்வீர், அன்வர் அலி, சயீத் அஜ்மல், சோகைல்.

# ஆஸஷ் தொடரில் பிரெஸ்னன் பங்குபற்றுவார்



அவுஸ்ரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற் கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட ஆஸஷ் தொடரில் பங்குபற்றி வரும் இங்கிலாந்து அணி சார்பாக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ரிம் பிரெஸ்னன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தில் இடம்பெற்ற ஆஸஷ் தொடரில் கீழ் முதுகு உபாதைக்குள்ளான ரிம் பிரெஸ் னன், முதலாவது டெஸ்ட் போட் டியில் பங்குபற்றியிருக்கவில்லை. அதன் பின்னர் இந்த ஆஸஷ் தொடருக்கான குழாமிலும் அவர் இடம்பெற்றிருக்கவில்லை.

எனினும் இங்கிலாந்தின் திறமை வெளிப்பாடு அணியில் ரிம் பிரெஸ்னன் இடம்பெற்றிருந்தார். குயீன்ஸ்லாந்து இரண்டாவது பதினொருவர் அணிக்கெதிராக போட்டியில் பங்குபற்றிய ரிம் பிரெஸ்னன், அப்போட்டியில் சிறப் பாகச் செயற்பட்டிருந்ததோடு, தனது முழு உடற்தகுதியையும் நிரூபித்தி ருந்தார்.

இதன் காரணமாக டிசெம்பர் 5ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ரிம் பிரெஸ்னன் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த போட்டியில் பங்குபற்றிய கிறிஸ் ட்ரெம்லெட்டிற்குப் பதிலாகவே அவர் இரண்டாவது போட்டியில் பங்கு பற்றுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

பிறிஸ்பேனில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் இங்கி லாந்து அணி 381 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்ததோடு மூன்றாவது வேகப்பந்து வீச்சா ளராகக் களமிறங்கிய கிறிஸ் ட்ரெம்லெட் எதிர்பார்த்தளவு பெறு பேறுகளை வெளிப்படுத்தியி ருக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

# நியூசிலாந்து - கரீபியன் டெஸ்ட் இன்று ஆரம்பம்

மேற்கிந்திய தீவுகள் நியூசிலாந்து மோதும் முதல் டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது.

3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் அணி நியூசிலாந்து சென்றுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் - நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் டுனிடினில் இன்று (செவ்வாய்க்கிழமை) தொடங்கு கிறது. நியூசிலாந்து அணியின் முன்னணி பேட்ஸ்மேன் வில்லி யம்சன் காயம் காரணமாக முதல் டெஸ்டில் விளையாடவில்லை.

மேற்கிந்திய தீவுகள் அணி சமீபத்தில் இந்திய மண்ணில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்து இருந்தது.

# தேசியமட்ட விளையாட்டு போட்டி

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற பாடசாலை ஆசிரியர் களுக்கான தேசிய மட்ட விளை யாட்டுப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் எஸ். அன்ரன் மூன்று போட்டிகளில் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றுள் ளார்.

இப்போட்டிகள் கடந்த இரண்டு நாட்கள் நுவரெலியாவில் நடை பெற்றது.

இதில 400 மீற்றர், 800 மீற்றர், ஆயிரத்து 500 மீற்றர் ஆகிய போட்டிகளில் முதலிடத்தை அவர் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**German Language Academy**

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் துறை சார்ந்த ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் புதிய வழிமுறைகளில் A1பரீட்சைக்கு ஏற்றவாறு Audio, Vedio மூலம் மிகவும் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது.

ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் மொழிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

அவதானிப்பு : 29.10.2013 செவ்வாய்க்கிழமை எமது German Language Academy நிறுவனம் பற்றி பத்திரிகையில் சிறப்புச் செய்தியில் பிரசுரமாகியது குறிப்பிடத்தக்கது.

GERMAN LANGUAGE ACADEMY
No. 23, Palaly Road, Jaffna.
T.P : 0779707322

N Soft Academy
Vairavar Kovil Road,
Vairavar Puliyang Kulam, Vavuniya.

(4637)

இந் நிறுவனத்தில் ஒரே ஒரு ஆசிரியர் S. கோணேஸ்வரன் அவர்களால் மட்டுமே கற்பிக்கப்படுகிறது. தொடர்பு கொண்ட பின் நேரில் வரவும்.

26ஆவது வருட கல்விச் சேவையில்...

புதிய **நாவலர்** கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டு - 2014**

தரம் 1 முதல் O/L வரை

✠ தமிழ் மொழிமூலம் ✠ English Medium

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் சனி
07-12-2013 பி.பகல் 3.00 மணி

புதிய அனுமதிகள் இன்று முதல்

(C-5639)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் O/L தகைமையுடன் இருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சந்தைப்படுத்தல் (Marketing Executive) துறையில் ஆர்வம் உடையவர்கள் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

- அடிப்படைச் சம்பளம் 15,000 - 25,000 /-
- தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
- வயதெல்லை 18 - 35
- வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் உண்டு
- குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் சுபீட்சமாகும். (20 பேர் மட்டும்)

தொடர்புகளுக்கு :- 0777 981 471, 077 556 6226

(4647)

# அமைச்சர் பீரிஸ் பதவி விலக மங்கள கோரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கைகள் தோல்வியடைந்துள்ளதால் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பதவி விலக வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை முன்னிட்டு அமைச்சர் பீரிஸ் கடைபிடித்த ஆபிரிக்க கொள்கை தோல்வியடைந்துள்ளது.

இலங்கை - ஆபிரிக்க நாடுகள் தொடர்பில் வலுவான வெளிநாட்டு கொள்கையை கொண்டிருந்த போதிலும் பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் 19 ஆபிரிக்க நாடுகளில் 7 நாடுகள் மட்டுமே இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்றன.

ஆபிரிக்க நாடுகளில் தலைமை நாடாக விளங்கும் நைஜீரியா மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. நைஜரியா ஆபிரிக்க பிராந்தியத்தில் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து வரும்ஒருமுக்கியமானநாடு.

அத்துடன் ஆபிரிக்க நாடுகளில் பல நாடுகளின் தலைவர்கள் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்க்கு சுயமரியாதை இருந்தால் அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றார். (எ-11)

# இலங்கைக்கு எதிரா...

இலங்கையில் அண்மையில் நடந்து முடிந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்திருந்தார். இந்நிலையில், இலங்கைக்கு எதிரான அழுத்தங்களை மேலும் அதிகரிக்கும் வேலையில் பிரித்தானியாஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் 2014-ம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு மறக்க முடியாத பாடத்தை கற்றுக்கொடுக்க வேண்டும் என பிரித்தானியாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டு பிரதமர் கமரூனிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசு போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக போதுமான விசாரணைகளை நடத்தவில்லை எனத் தெரிவித்து பிரித்தானியா பொருளாதாரத் தடை விதிக்கும் திட்டம் இருப்பதாக அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியுள்ளன.

இதன் மூலமாக சர்வதேச போர்க குற்ற விசாரணைக்கு இலங்கையை உட்படுத்துவதே பிரித்தானியா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் நோக்கம்எனக்கூறப்படுகிறது. (எ-2.11)

# கோவணத்துடன்...

திட்டத்தில் விவசாயிகள் மறக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாயிகளுககு ஓய்வூதியம் வழங்கும் வயதை 60 இல் இருந்தது 63 ஆக அதிகரித்தமையை உடனடியாக இரத்துச் செய், விவசாயிகளின் நிலுவையான ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு நிதி ஒதுக்கு போன்ற கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இவ் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. (எ-11)

# இலங்கைக்...

கள் மற்றும் காலக்கெடு முன்னால் அடிபணிய போவதில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவாகக் கூறியுள்ளார்.

இலங்கை எந்த திசையில் செலல வேண்டும் என்பதை இலங்கையே தீர்மானிக்கும். ஏனைய நாடுகள் அதனை தீர்மானிக்க முடியாது.

அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் இருந்தாலும் அரசாங்கம் தனது பொறுப்பை எந்த விலை கொடுத்தாயினும் மற்றுமொரு நாட்டிடம் விட்டுக் கொடுக்காது.

காலக்கெடுக்களை நாங்கள் ஏற்க முடியாது. சர்வதேச தரங்கள் சகல நாடுகளுக்கும் சமமாக பொருந்தும். தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் மீது மட்டும் திணிக்கக் கூடாது என்றார். (எ-11)

# ஐ.நாவின் விசேட...

இந்நிலையில் இன்று காலை செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்துக்கு ஐ.நா.பிரதிநிதி பயணம் மேற்கொள்கிறார். கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள்சபையின்மனித உரிமைகள் சபைக்கூட்டத்தொடரில்இலங்கை அரசுக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதில் இலங்கை அரசு, ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் ஐ.நா. பிரதிநிதி, வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட அரச அதிபர், யாழ்.மாவட்ட இராணுவத தளபதி ஆகியோரைச் சந்திப்பதுடன், வலி.வடக்கு மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள கோணாப் புலம் நலன்புரி நிலையத்துக்கும் செல்வார்.

இதன்பின்னர் நாளை புதன் கிழமை முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் செல்லும் அவர், அங்கு அரச அதிபரையும், இராணுவத் தளபதியையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என மேலும் தெரிய வந்துள்ளது. (எ-6)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# கூட்டமைப்பினருக்கு...

ருந்த தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்திருந்தார்.

இந்தத் திட்டத்துக்கு தென்னாபிரிக்கா உதவியளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா கொழும்பில் சந்தித்து, இந்தத் திட்டம் குறித்து எடுத்துக் கூறியிருந்தார்.

அதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், தாம் இந்தியாவுடன் கலந்துரையாடிய பின்னர் பதிலளிப்பதாக கூறியிருந்தனர்.

இந்தநிலையில், தமது யோசனை குறித்த பதிலுடன் தென்னாபிரிக்காவுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பிரிட்டோரியா அழைப்பு விடுத்துள்ளது.

அடுத்த வாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு பிரிட்டோரியா வரும் என்றும் தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது என்றும் கொழும்பு ஆங்கில வார இதழ் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# வடக்கிற்கு...

பக்ஷ விடுத்த அழைப்பை ஏற்காத இந்திய பிரதமர் வடக்கு மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று அங்கு செல்வதற்காக நாட்டுக்கு வருவாராயின் அதனை ஐதேகட்சிஎதிர்க்கும்

வடக்கு மாகாண முதலமைச்சரின் அழைப்பை ஏற்று இந்தியப்பிரதமர் இலங்கை வரவுள்ளதாக சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை சீர்குலைக்கும் சதித்திட்டமாக இது இருக்கலாம் எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டார். (எ-6)

# ஜனாதிபதியின் செயலில்...

வடக்கு மாகாண சபை தேர்தல் காலப பகுதியில் நான் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தேன்.

அதாவது வடக்கில் நடைபெறுவது மகிந்த ராஜபக்ஷ சிந்தனையா அல்லது மகிந்த ஹத்துருசிங்க சிந்தனையா எனக் கேட்டேன். இந்த நிலையே மீண்டும் இங்கிருக்கின்றது. அதனால் அதே கேள்வியை மீண்டும் கேட்கின்றேன்.

குறிப்பாக இப்போது நடைபெறுவதனை அவதானித்தால் ஜனாதிபதிக்கு இங்கிருக்கும் இராணுவத்தோடு தொடர்பு பட்டவர்கள் சம்பந்தமாக அல்லது இங்கிருக்கும் நடவடிக்கைகள் அல்லது ஆளுநர் சம்பந்தமாகவோ அவருக்கு எந்தவிதமான அதிகாரமும் இருப்பதாக எமக்கு தெரியவில்லை.

ஏன் என்றால் அவர் எங்களுடன மிக நன்றாக நல்லதொரு முறையிலேயே கேட்பதெல்லாம் தருவதாக உறுதியளித்திருந்தார். அதே போன்று இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் தூதுவர்களுக்கும் இதனைத் தெரிவித்து வருகின்றார்.

இதேபோன்று கடந்தவாரம் ஜனாதிபதியினை சந்தித்திருந்த நோர்வே நாட்டின் தூதுவரிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள வடக்கு மாகாண சபையுடன் சேர்ந்து செயற்படத் தயார் என்றும் அதற்கான உதவிகளை வழங்கவுள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் இங்கு நடைபெறுவது வேறு. இதன் காரணத்தினால் நாங்கள் பரிசீலிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அல்லது இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு எடுத்தியம்ப வேண்டியிருக்கிறது.

ஆகவே இத்தகைய விடயங்கள் மற்றும் இங்குள்ள விடயங்கள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

உ

சிவமயம்

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சிவஆராதனையும் பிரார்த்தனையும்**

காலம் :- 04.12.2013 புதன்கிழமை
இடம் :- சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானம்

மேற்படி பிரார்த்தனை நிகழ்வு காலை 7.30 மணி முதல் நடைபெறும் வேத உபசார நிகழ்விற்கு ஒன்றியத்தின் மகாசபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு பிரார்த்தனைக்கு வலுச் சேர்க்க இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

(C-5640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.